கணபதி துணை.

நீதிநெறிவிளக்கம்

[உரையுடன்]

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தருமபரிபாலகர்

பொன்னுஸ்வாமி அவர்களால்

சென்னை:

வித்தியாநுபாலன அச்சகத்தில்

அச்சிடப்பட்டது.

மன்மத, மார்கழி.
டிஸம்பர், 1955.

விலை அணா 8

வித்தியாநுபாலன அச்சகம்,
நெ. 300, தங்கசாலைத் தெரு, சென்னை.

பதிப்புரை

நீதிநெறிவிளக்கம் அறநெறியை விளக்குவது. திருக்குறளின் சாரமாய்த் திகழ்வது. பதினெண்கீழ்க்கணக்கு நீதி நூற்களை ஒத்திருப்பது. இவ்வரிய நூல் 300 ஆண்டுகளுக்கு முன் மதுரை அரசராயிருந்த திருமலை நாயகர் விருப்பத்தின்படி **குமரகுருபர சுவாமிகளால்** இயற்றப் பட்டது இவர் கலைமகளின் அருள்பெற்றவர். தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தவர். திருப்பனந்தாள் காசிமடத்தின் ஆதித் தலைவர். பல வருடங்கள் காசியிலேயே வசித்துத் தமிழ் நூல்களையும் சைவ நூல்களையும் இயற்றியவர். சைவத்தின் மாட்சியை காசியில் முஸ்லிம் அரசர்களுக்கும் இந்துஸ்தானி பாஷை மூலமாக அறிவித்து அவர்கள் உபகாரத்தைப் பெற்று இன்றும் நிலவும் ஓர் சைவ மடத்தைக் காசியில் கட்டியுளார்.

இத்தகையப் பெரும்புலவரின் நீதிநெறிவிளக்கம் பல ஆண்டுகளாகப் போற்றப்படுகின்றது. இதற்கு உரை பல பண்டிதர்கள், சி. வை. தாமோதரம் பிள்ளை முதலியோர் எழுதியுள்ளனர். அவை இப்போது கிடைப்பது அருமை. 1902-ல் **சுன்னுகம். குமாரசுவாமிப் புலவர்** ஓர் உரையெழுதி வெளியிட்டனர். அவ்வுரை மற்றைய உரைகளினும் சிறந்ததாகக் காணப்பட்டது ஆயினும் அது இப்போது அச்சில் இல்லை. சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் 33 ஆண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணத்தில் பெரும்புலவரா யிருந்தவர். மதுரைத் தமிழ்ச் சங்கத் தாபகராகிய பாண்டித்துரைத் தேவரால் நன்கு மதிக்கப்பட்டவர். நாவலரிடத்தில் பேரன்புடையவர். அவரது தமையனாரின்

குமாரராகிய த. கைலாசபிள்ளையின் நண்பர். அவரோடு சேர்ந்து சில நூல்களை வெளியிட்டவர். பல தமிழ் நூல்களை வெளியிட்டவர். இத்தகைய பேராசிரியரின் நீதிநெறிவிளக்கவுரை மறைந்து விடுகின்றதே யென்னும் ஆர்வத்தினாலும் இக்காலத்து மாணவரும் தமிழ் உபாத்தியாயரும் தகுதியான உரையைத் தேடி அலைவதாலும் இவ்வுரையை அச்சிடலானேன். பழைய தமிழ் நூல்கள் அழியாவண்ணம் காக்கவேண்டியது நமது கடமையன்றோ?

உ

கணபதி துணை.

நீதிநெறிவிளக்கம்

[உரையுடன்]

கடவுள் வாழ்த்து

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இ - ள். இளமை நீரில் குமிழி - இளமைப்பருவம் நீரிலே தோன்றுங் குமிழிபோன்றழியும், நிறை செல்வம் நீரில் சுருட்டு நெடுந்திரைகள் - பெருஞ் செல்வம் நீரிலே சுருளுதலையுடைய பெருந்திரைகள் போன்றழியும், யாக்கை நீரில் எழுத்தாகும் - சரீரம் நீரிலே எழுதும் எழுத்துப் போன்றழியும், நமர்காள் எம்பிரான் மன்று வழுத்தாதது என் - நம்மவர்களே! நீவிர் எம்பெருமானுடைய சபையைத் துதியாது தாமதித்தற்குக் காரணம் யாது? எ - று.

நம்மவர்களே! இளமை, செல்வம் முதலியவற்றால் வரும் அற்பவின்பத்தினை நிலையென்றறியாது நம்பெருமானுடைய சபையைத் துதித்துப் பேரின்பம்பெறக்கடவீரென்பது கருத்து.

நமரங்காள் என்புழி அம் சாரியை. கடவுளை வணங்கிப் பெற்றுக்கொள்ளும் இன்பமொன்றுமே அழிவற்ற செல்வம் என்பதும், இளமை முதலியன அழியுமியல்பினவாய்த் துன்பங் கொடுப்பன என்பதும் பல நூல்களுக்கு மொத்த துணிபு. "எம்பிரானல்கும்-வீடதேயலாற் றுன்பறுமாக்கம் வேறுண்டோ"

என்பது கந்தபுராணம். "இளமையு நிலையாவா வின்பமு நின்ற வல்ல - வளமையு மஃதேயால் வைகலுந் துன்பவெள்ளம்" என்பது விளையாபதி.

கல்வியாலாகும்பயன்

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

இ - ள். அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும் - தருமமும் பொருளும் இன்பமும் மோட்சமுமாகிய நான்கினையுங் கொடுக்கும், புறங்கடை நல்லிசையும் நாட்டும் - புறத்திலே நற்கீர்த்தியையும் நிலைப்படுத்தும், உறும் கவலொன்று உற்றுழியும் கைகொடுக்கும் - வருதற்குரிய கவலையொன்று வந்துழியும் உதவிசெய்யும், சிற்றுயிர்க்கு கல்வியின் ஊங்கு உற்றதுணை இல்லை - (ஆதலாற்) சிறிய மக்களுயிர்கட்குக் கல்வியினும் மேம்பட்டுச் சிறந்த துணை வேறில்லை. எ - று.

அவசியம் பெறற்பாலனவாகிய அறம் பொருள் இன்பம் வீடென்பவைகளைக் கொடுத்து நற்புகழையும் காட்டி மனக் கவலையையும் மாற்றுதலாற் கல்விப்பொருளே மக்களுயிர்க்கு மிக்குயர்ந்த துணையென்பது கருத்து.

புறங்கடை என்புழிக் கடை என்பது ஏழாம்வேற்றுமையுருபு. இங்கே புறமென்றது கற்றுவல்லோனிருக்கும் ஊர்க்குப்புறமாகிய இடத்தை. கவல் - கவலை. கவலையாவது இட்டமுள்ள ஒன்றினை இழத்தன்முதலியவைகளான் மனத்திலே தோன்றும் வியாகுலம். கவலையுற்றுழிக் கைகொடுத்தலாவது இடையேவந்த இடுக்கணைக்கெடுத்துச் செயற்பாலதிதுவென அறிந்து மனங் கிளர்தற்குக் காரணமான அறிவினையுண்டாக்குதல். "வறுமை

யான் மடமைதன்னுன் வருந்திநெஞ் சழியுங்காலை - உறுதிசெய் துணையாங் கற்ற வுணர்வினை வளர்க்கும்" என்பது **விநாயக புராணம்.** (1)

கல்வியாலாகுமின்பம்

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி—நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.

இ - ள். மடம் கொன்று அறிவு அகற்றும் கல்வி - அறிவின்மையையழித்து அறிவினைப் பெருகச்செய்யுங் கல்வியானது, தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும் - கற்கப் புகுங் காலத்திலே துன்பங் கொடுக்கு மியல்பினதாய்ப் பின்னர் இன்பங்கொடுக்கும், நெடுங் காமம் முன் பயக்கும் சில் நீர இன்பத்தின் பின் பயக்கும் பீழை பெரிது-மிக்க காமமானது முன்னர்க் கொடுக்கின்ற அற்பத் தன்மையுடைய இன்பத்தினும் பின்னர்க் கொடுக்கின்ற துன்பம் பெரியதாகும். எ - று.

கல்வியாலுண்டாகும் இன்பமே மிகச் சிறந்ததென்பது கருத்து.

கற்கப் புகும்போது நீங்காதிருந்த அறிவின்மையே துன்பம் பயத்தற்கும், கற்றுணரவுணரத் தோன்றுமறிவுண்மையே இன்பம் பயத்தற்கும் காரணமாதலைப் புலப்படுத்துதற்கே "மடங்கொன் றறிவகற்றுங்கல்வி" என்றார். எல்லாப்போகங்களினும் தான் மிக்க விருப்பங்கொடுத்தல்பற்றி மகளிர்போகம் நெடுங்காமமெனப்பட்டது. முற்றிழாய் என்பது மகடூஉமுன்னிலை. தொழின்முற்றிய இழையையுடையவளே என்பது பொருள். இழை - ஆபரணம். இழாயென விளியுருபேற்றது. (2)

நற்சவையைச்சிறப்பித்தல்

**கல்வியே கற்புடைப் பெண்டிராப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவையை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு.**

இ - ள். கல்வியே கற்புடை பெண்டிரா - கல்விதானே கற்புடை மனைவியராகவும், தீங்கவி ஏ பெண்டிர்க்கு செல்வம் புதல்வனா - இனிய கவிதானே அம்மனைவியர்க்கு (நற்குணம் முதலிய) செல்வத்தினையுடைய புத்திரனாகவும், சொல் வளம் மல்லல் வெறுக்கையா - அக்கவியிலமைந்த சொற்களின் சிறப்பே பொலிவையுடைய திரவியமாகவுங் கொண்டு, மாண் அவையை மண்ணுறுத்தும் செல்வமும் சிலர்க்கு உண்டு - நற்சவையை அலங்கரிக்கின்ற செல்வமும் சிலரிடத்திலே உள்ளதாகும். எ - று.

கல்வியைச் செவ்வேகற்று நல்லிசையோடு சொல்வலியு மமையக் கவிசெய்யும் வன்மை எல்லார்க்குங் கிடையாதென்பது கருத்து.

புகழும் பொருளும் பிறவும் பெற்று மேம்படுதற்குக் காரணமாதல்பற்றிக் கல்வியே கற்புடைப்பெண்டிர் எனவும், சித்திரித்துச் சவையிலே வைக்கப்பட்ட பொருள் பார்ப்பவர் மனத்தைக் கவர்ந்து சிறப்பித்தல்போல நற்கவிஞருங் கற்றோர் மனத்தைக் கவர்ந்து சிறப்பித்தல் பற்றி மாணவையை மண்ணுறுத்தும் எனவுங் கூறினார். நற்சவையாவது: "புகழுந் தருமநெறி நின்றோர் பொய்காமம் - இகழுஞ் சினஞ்செற்ற மில்லோர்—நிகழ்கலைகள் - எல்லா முணர்ந்தோ ரிருந்தவிடம்" என்பது வெண்பாப் பாட்டியல். (3)

கல்வியைச்சிறப்பிப்பன

எத்துணைய தாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

இ - ள். கல்வி எத்துணையதாயினும் - (ஒருவனிடத்துள்ள) கல்வி எத்துணைப் பெருக்கமுடையதாயினும், இடம் அறிந்து உய்த்துணர்வு இல்லெனின் இல்லாகும் - இடத்தினையறிந்து சொற்களை கொண்டுபோய்ச் சேர்த்துப் பொருள்கொள்ளு முணர்வில்லையாயின்; (அக்கல்வி அவனிடத்) தில்லை யென்று எண்ணப்படும், உய்த்துணர்ந்தும் சொல்வன்மை இன்றெனின் என்னும் - அவ்வாறே உய்த்துணர்ந்தவிடத்தும் வாக்குவன்மை இல்லையாயின்; அதனால் யாது பயனுளதாகும்? அஃது உண்டேல் பொன்மலர் நாற்றமுடைத்து - வாக்குவன்மையுமுளதாயின்; பொன்னாலாய பூவானது பரிமளமுமுடையதாயின் அதனை ஒக்கும். எ - று.

பொற்பூவானது பரிமளமுமுடையதாயின் எவ்வாறு சிறக்குமோ, அவ்வாறே உய்த்துணர்வுஞ் சொல்வன்மையுமுடையவனுடைய கல்வி சிறக்குமென்பது கருத்து.

இவன் யாதுமறியானென்று யாவரானு மிகழப்படுதல்பற்றி இல்லாகும் என்றும், யாதும் பயன்படாமைபற்றி என்னும் என்றுங் கூறினர். உய்த்துணர்வு பொன்மலருக்கும் அதனோடு சொல்வன்மை அம்மலர் பரிமளமுடைமைக்குஞ் சமமெனக் கொள்க. உய்த்துணர்வு என்பதற்குப் புத்தியை நூல்களிலே செலுத்தி ஆராய்ந்து பொருந்துமாறறிதலென்பதும் பொருந்தும். (4)

சவையஞ்சுவார்கல்வி

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

இ - ள். அவை அஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் - சவையிலே எடுத்துச் சொல்லுதலையஞ்சி உடம்பு நடுங்கு வோருடைய படிப்பும், கல்லார் அவையஞ்சா ஆகுலச் சொல்லும் - மூடர் சபையை அஞ்சாதுபேசும் ஆரவாரச் சொற்களும், நவை அஞ்சி ஈத்து உண்ணார் செல்வமும் - பழிபாவங்களாகிய குற்றங்கள் சாராது தேடி நல்வழியிற் கொடுத்துத் தாமு மனுபவியாதவருடைய செல்வமும், நல்கூர்ந்தார் இல் நலமும் - வறியவருடைய இல்லாளின் நன்மையும், பூத்தலின் பூவாமை நன்று - உண்டாதலினும் உண்டாகாதிருத்தல் உத்தமமாகும். எ - று.

சவையஞ்சுவார் கல்வியினுற் சிறிதும் பயனில்லையென்பது கருத்து.

சொல்லக்கருதிய சவையஞ்சுவார் கல்வியோடு பெரிதும் அதன்குணத்தையுடைய ஆகுலச்சொன் முதலியவைகளும் உடன் வைத்துக் கூறப்பட்டமையால் இது பழிப்பொப்புமைக்கூட்ட மென்னுமணி. தம்மைப் பிறரறிதல் வேண்டிச் சொல்லப் படுதலின் ஆகுலச்சொல் என்றார். பாவத்தால் வந்த பொருளைக் கொடுத்தலும், அறஞ்செய்தற்குக் காரணமான தன்னுடம்பை உண்ணுது வாட்டுதலுந் தருமமாகா. (5)

கல்வியாலாகும்புகழ்

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

இ - ள். கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும் - சரசுவதியின் வாழ்வு முகத்தினிடத்ததாகப் பெறினும், மலரவன் வண் தமிழோர்க்கு ஒவ்வான் - பிரமதேவர் சிறந்த தமிழறிஞர்க்குச் சமமாகமாட்டார், மலரவன் செய் வெற்றுடம்பு மாய்வன - பிரமதேவராற் செய்யப்பட்ட வெறிய உடம்புகள் அழியுந்தன்மையுடையனவாகும், இவர் புகழ்கொண்டு செய்யும் உடம்பு மாயா - தமிழறிஞர் புகழாற் செய்யும் உடம்புகள் அழிதன்மாலையவல்ல. எ - று.

தமிழ்ப்புலவர் பிரமதேவரினும் மிக்கவரென்பது கருத்து.

பிரமதேவருக்குத் தமிழ்ப்புலவர்க்குந் தொழில்பற்றி வேற்றுமைகூறுதலால் இது தொழில்வேற்றுமையணி. மண் நீர் முதலிய பூதங்களாலாயதென்பது அறிவித்தற்கு வெற்றுடம்பென்றார். போல் - அசை. (6)

சவையிலுதவாக்கல்வி

நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்கு வருங்கல்வி—கடும்பகலில்
ஏதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று பீப்பரி தால்.

இ - ள். நெடும்பகல் கற்ற அவையத்து உதவாது - பலநாளாகத் தம்மாற் படிக்கப்பட்ட நூல்கள் சவையிலே எடுத்துச் சொல்லுதற்குக் கைகூடப்பெறாமல், உடைந்துளார் உட்குவரும் கல்வி - தோல்வியடைந்தவருடைய அஞ்சுதலைக் காட்டுங் கல்வி, கடும் பகலில் ஏதிலான்பால் கண்ட இல்லினும் பொல்லாதே - (பசிப்பிணியால் வருந்திச் செல்லும்) உச்சிக்காலத்திலே (அட்டிற் றொழிலும் விட்டு) அயலவன்பால் வசப்பட்டிருக்கக் கண்ட மனையாளினுந் தீயதாகும், தீது என்று நீப்பு

அரிது - (எனெனின், அவளைத் தீயவளென்று நீக்குமாறு போல) தன்னைத் தீயதென்று நீத்தற்கரியது. எ - று.

கற்கப்பட்ட நூல்களைப் பலமுறையும் நினைத்து மனத்திலே அமைத்திருத்தல்வேண்டும் என்பது கருத்து.

உட்கு - அச்சம். அது நுதல் வியர்த்தல் முதலிய பற்றி அறியப்படுவது. பெரிதும் விளக்கமுடைமைபற்றி உச்சிக்காலம் கடும்பகலெனப்பட்டது. கடி - விளக்கம். வருந்தித் தேவவைத் திருந்தும் உற்றசமயத்தி லுதவாமைபற்றிப் பொல்லாதே என்றார். (7)

கற்றவைகளைக்கைவிடுதல்

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்து சில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

இ - ள். தாம் வருந்தி கற்றன ஓம்பாது - (ஒருவர்) தாம் பலநாளாக வருந்திக்கற்ற நூல்களைப் பலமுறையும் நினைத்துப் பேணிக்கொள்ளாமல் விட்டு, மற்றும் சில பரிந்து கற்பான் தொடங்கல் - வேறுஞ் சில நூல்களை வருந்திக் கற்கும்படி தொடங்குதல், கைத்தலத்தகருந்தனம் உய்த்துச் சொரிந்திட்டு - கையிலுள்ள திரளான பெரும் பொன்னைக் கொண்டுபோய் வீசிவிட்டு, அரிப்பு அரித்து எய்த்து பொருள்செய்திடல் - (அக்கசாலையினின்றுஞ் சிதறி) மண்ணோடு கலந்துகிடக்கும் பொற்பொடிகளை அரித்தெடுத்துப் பிரயாசப்பட்டுத் திரட்டிப் பெரும் பொன்னாக்க முயலுதலை ஒக்கும். எ - று.

வருந்திக்கற்ற நூல்களை மறக்கவிட்டு வேறுநூல் கற்கப் புகுதல் மிக்க பேதைமை என்பது கருத்து. இதுபற்றியே

இலக்கணக்கொத்து நூலாரும் "வருவதிற் கருத்தினை மட்டுப் படுத்தி - வந்ததிற் சிந்தையைச் சிந்தா திறக்குக" என்றார்.

அரிப்பு - மண்ணோடு கலந்துகிடக்கும் பொற்றூள்; அரித் தெடுக்கப்படுதல் பற்றி அரிப்பெனப்பட்டது. சிறிது சிறிதாக அரித்துத் திரட்டுதல்பற்றி எய்த்துப்பொருள்செய்திடல் என்றார். ஆங்கு - அசை. (8)

வறியவர்கல்வி

எனைத்துணைய தேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலதாம்—மனைத்தக்காண்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல்.

இ - ள். மனைத்தக்காள் - மனையாட்டி, மாண்பில ளாயின்-மனையறத்திற்குத்தக்க நற்குணநற்செயல்களில்லா தவளாயின்; மணமகன் பூண்ட நல்லறம் புலப்படாபோல் - நாயகனாலே செய்யும்படி எடுத்துக்கொள்ளப்பட்ட நல்ல தருமங்கள் நன்குசெய்யப்பட்டனவாய் விளங்கமாட்டாமை போல, இலம்பாட்டார் கல்வி - வறியவரிடத்துள்ள கல்வி, எனைத்துணையதேனும் தினைத்துணையுஞ் சீர்ப்பாடிலதாம் - எத்துணைப்பெருமையுடைய தாயினும் தினையரிசியினளவேனுஞ் சிறப்புடையதாகி விளங்கமாட்டாது. எ - று.

வறியவர்கல்வி சிறிதும் பிரகாசிக்கமாட்டாதென்பது கருத்து.

நற்குணங்களாவன: வறியார்மாட்டருளுடைமை, நாயகன் முனியினு மன்பு நீங்காமை, முதலாயின. நற்செயல்களாவன: "சிறுகாலையட்டில்புகல், அருத்தியுறச்சமைத்தல், சுவைதிருத்தி யூட்டல், மறுகாலையென்னுது விருந்தழைத்தல்" முதலாயின. நல்லறமாவது: அருந்தவர் விருந்தர் முதலியோரைப் பேணுதல். அது, இந்நூலாசிரியர் கூறிய,

"நற்குண நிறைந்த கற்புடை மனைவியோ
டன்பு மருளுந் தாங்கி யின்சொலின்
விருந்து புறந்தந் தருந்தவர்ப் பேணி
யைவகை வேள்வியுமாற்றி"

—சிதம்பரமும்மணிக்கோவை.

என்னும் செய்யுளானும் பெறப்படும். (9)

கல்வியறிவின்மை

இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—என்சொலினுங்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற.

இ-ள். இன் சொல்லன் தாழ் நடையனாயினும் ஒன்று இல்லானேல் - (ஒருவன்) இனிய சொற்களைச் சொல்வோனாய்ப் பணிவுடையனாயினும் பொருள் சிறிது மில்லாதவனாயின்; கடல் ஞாலம் - கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ள சனங்கள், வன் சொல்லின் அல்லது வாய் திறவா - (அவனோடு) கடுஞ்சொற்கொண்டு பேசுவாரன்றி இன்சொற்கொண்டு பேசார், என் சொல்லினும் கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் - யாதுதான் சொன்னாலும் செல்வமுடையவனது காலின்கீழமைந்து ஒடுங்கி நடப்பார்கள், பித்துடைய - (அச்சனங்களே) மயக்கவுணர்வுடைவர்களாவர், பிற அல்ல - மற்றையன மயக்கவுணர்வுடையனவாகா. எ-று.

உலகத்திற் சனங்கள் நற்குணநற்செயலிலராயினுஞ் செல்வருக்கமைந்து நடப்பார்களென்பது கருத்து.

இன்சொல் - கேட்பார்க்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் மதுர வார்த்தை. தாழ்நடையாவது எதிர்கொளல், இருக்கைவிட்

டெழுதல், வணங்குதல் முதலியன. வன்சொல் - கேட்போர்க்கு வெறுப்பினை விளைவிக்குங் கடுஞ்சொல். கடிந்துபேசினுங் கைவிடாரென்பது தோன்ற என்சொலினுமெனவும், நல்லதன்பாலுள்ள நன்மையுந் தீயதன்பாலுள்ள தீமையுமுள்ளவாறு பிரித்துணராமைபற்றிப் பித்துடைய எனவுங் கூறினர். (10)

கல்லாதவர் செயல்

இவறன்மை கண்டு முடையாரை யாருங்
குறையிரந்து குற்றேவல் செய்ப—பெரிதுந்தாம்
முற்பக லோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று.

இ - ள். இவறன்மை கண்டும் - உலோபகுணமுடைமையை அறிந்திருந்தும், உடையாரை யாரும் குறையிரந்து குற்றேவல் பெரிதும் செய்ப - செல்வரைப் பின்சென்று யாவரும் குறைகூறி யாசித்து நின்று பெற்றுச் சிறிய ஏவல்களையும் அதிகமாகச் செய்வார், தாம் முற்பகல் நோலாதார் நோற்றாரை பின்செல்லல் கற்பு ஏ - தாம் முன்னைநாளிலே (பொருள் பெறுதற்கேற்ற) தவஞ்செய்து வையாதவர் (அது பெற்றதற்கேற்ற) தவஞ்செய்து வைத்தவரைப் பின்சென்று நடத்தல் கல்வியறிவாலாய செயலேயாம், கல்லாமை அன்று - கற்றுணராமையாலாய செயலன்று. எ - று.

உலோபகுணமுடையவராயினும் செல்வர்களை யாவரும் பின்சென்று தாமேமேவி ஏவல்களைச்செய்வாரென்பது. கருத்து.

இவறன்மை - பொருளை விடவேண்டுமிடத்து விடாது பற்றுதலைச்செய்யுமுள்ளம். இதனை வடநூலார் உலோபமென்பர். அன்று - அசை. உலோபிகளைப் பின்செல்வோர் புகழ்வது போலப் பழிக்கப்பட்டவாறுணர்க. (11)

கல்வியழகு

கற்ருர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்ருே ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

இ-ள். கற்ருர்க்கு கல்வி நலனே கலன் அல்லால் மற்று ஓர் அணிகலம் வேண்டாவாம்-கற்றுணர்ந்தோர்க்குக் கல்வியழகே ஆபரணமாகும் அதுவன்றி வேருேராபரணம் வேண்டப்படுவதில்லை, உற்ற முழுமணி பூண் பூணுக்கு வேண்டா-மிக்க மாணிக்கரத்தினம் அழுத்திச் செய்யப் பட்ட ஆபரணத்திற்கு அழகுசெய்யும்படி வேருபரணம் வேண்டப்படுவதில்லை, அழகுக்கு அழகுசெய்வார் யார்-அழகினுக்கு அழகுசெய்பவர் யாவருமில்லை. எ-று.

கற்ருேருக்குக் கல்வியழகே ஆபரணம்போலச் சிறப்புச் செய்யுமென்பது கருத்து.

"குஞ்சியழகு கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

—நாலடியார்.

முழுமணி - மாணிக்கம். (12)

கல்விச்செருக்கு

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னுல்.

இ - ள். முற்றும் உணர்ந்தவர் இல்லை - நூல்களெல்லாவற்றையுங்கற்றுணர்ந்தவர் யாவருமில்லை, முழுவதூஉம் கற்றனம் என்று களியற்க - நூல்களெல்லாவற்றையும் கற்றுணர்ந்துவிட்டோமென்று செருக்குக்கொள்ளாதொழிக, சிற்றுளியால் கல்லும் தகரும் - ஒரு சிறிய உளியினாலே பெரிய மலைகள் தாமும் தகர்க்கப்பட்டழியும், கொல்லுலை கூடத்தினால் தகரா - (அம்மலைகள்) கொல்லனுலைக்களத்திற் செய்யப்பட்ட பெரிய சம்மட்டியினாலே தகர்க்கப்பட்டழியமாட்டா. எ - று.

நூல்களெல்லாவற்றையுங் கற்றுணர்ந்துவிட்டோமென்று செருக்குறுதலாகாதென்பது கருத்து.

கல்வி பலவாதலுங் கற்பர்நாள் சிலவாதலும்பற்றி முற்றுமுணர்ந்தவரில்லையென்றார். "கல்வி கரையில கற்பவர் நாள்சில" என்பது **நாலடியார்**. பெருங்கல்வி யுடையவனால் வெல்லப்படாத ஒருவனை அற்பக் கல்வியுடையவன்றானும் வெல்லுவானென்பது புலப்பட இருப்புச்சம்மட்டியினாலே உடைக்கப்படாதமலை ஒரு சிற்றுளியால் உடைக்கப்படுமென்றார். "கடலே யனையம்யாங் கல்வியாலென்னு - மடலேறனையசெருக்காழ்த்தி - விடலே" என்பது **நன்னெறி**. கனங்குழாய் என்பது மகடூஉ முன்னிலை. கனவியகுழையாளே என்பதுபொருள். (13)

கற்றதுக்கீறிதெனக்காணல்

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

இ - ள். தம்மின் மெலியாரை நோக்கி தமது உடைமை அம்மாபெரிதென்று அகமகிழ்க-(தம்மிடமுள்ள செல்வம் மிக அற்பமேயென்றுவருந்துவோர்) செல்வத்தி

ஞலே தம்மினும் அதிகங் குறைந்தவரைப்பார்த்துத் தம்முடைய செல்வம் மிகப்பெரியதென்று மனமகிழக் கடவர், தம்மினும் கற்றாரை நோக்கி - (அதிகங் கற்றே மென்பவர்) தம்மினும் அதிகங் கற்றுணர்ந்தவரைப் பார்த்து, நாம் கற்றதெல்லாம். இவர்க்கு எற்றே என்று கருத்தழிக - நாம் கற்றுக்கொண்ட கல்விமுற்றும் இவர் கல்விக்குமுன் எத்தன்மைத்தாகும் (மிக அற்பமாகு மென்றபடி) என்று நினைத்து முன்னர்த் தாங் கற்றதே பெரிதென்றிருந்த எண்ணம் அழியக்கடவர். எ - று.

அதிகங் கற்றோமென்று செருக்கடையாது பின்னும்பின்னுங் கற்றல்வேண்டுமென்பது கருத்து.

அம்மா - ஓரதிசயவிடைச்சொல் தாங்கற்றதே பெரி தென்னுங் கர்வம், கற்றதைக் கெடுத்தலன்றிப் பின்னுங் கற்கவிடாமைபற்றிக் கருத்தழிக என்றார். "செருக்குறவழியுங் கற்றகல்வி" என்பது திருவிளையாடற்புராணம். மிகவற்பமென்பது தோன்ற எற்றே என்றார். (14)

கல்வியுஞ்செல்வமும்

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

இ - ள். கல்வியுடைமை பொருளுடைமை என்ற இரண்டு செல்வமும் செல்வம் எனப்படும் - (ஒருவரிடத் துள்ள) கல்விப்பொருள் செல்வப்பொருளென்று சொல்லப் பட்ட இருவகைச் செல்வமுஞ் செல்வந்தானென்று நன்கு மதிக்கப்படும்; இல்லார் குறையிரந்து தம்முன்னர் நிற்ப போல் - அவ்விருவகைப்பொருளு மில்லாதவர் குறைகூறி

யாசித்துத் தமக்கு முன்னே பணிந்து நிற்றல்போல, தாமும் தலைவணங்கி தாழ பெறின் - தாமும் பிறர்முன்னே தலைசாய்ந்து பணிந்தொழுகப் பெறுவாராயின். எ - று.

செருக்குடையவருடைய கல்வியுஞ் செல்வமுஞ் சிறிதும் மதிக்கப்படமாட்டா என்பது கருத்து.

உடைமை-பொருள். தாழ்ந்து நடப்போனுடைய செல்வமே தனக்குரிய நன்குமதிப்பினைத் தப்பாது பெறுமென்னுங் கருத்தினையடக்கித் தலைவணங்கித் தாழப்பெறின் செல்வமுஞ் செல்வமெனப்படுமென்றார். செல்வமென முன்னர்ப் பெறப்பட்டதாயினும் நன்குமதிக்கப்படுதலாகிய ஒருகருத்துத்தோன்றப் பின்னுங் கூறுதலால் இது விதியணி. பணிவில்லாரிடத்துள்ளதுஞ் செல்வமெனப்படினுஞ் செருக்கென்னுமழுக்கடைந்து வேறொன்றாக எண்ணப்படுமென்க. (15)

பெரியோர்பணிவு

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு.

இ - ள். ஆக்கம் பெரியார் - செல்வம் பெரிதுடையவர், சிறியா ரிடைப்பட்ட மீச்செலவு காணின் நனி தாழ்ப - சிறியவரிடத்திலே தோன்றிய தலையெடுப்பினைக் காண்பாராயின் தாம் மிகவும் பணிந்தொழுகுவர், துலைக்கு தூக்கில் - தராசிலே தூக்கப்படுமாயின்; மெலியது மேன் மேல் எழ செல்ல செல்ல - (அதற்குத் திருட்டாந்தம்) கனமில்லாத நொய்ய பொருள் அதிகம் உயரும்படி மேலே போக, வலிது தாழும் அன்றே - கனமுடைய வலிய பொருள் கீழே அதிகந் தாழுமல்லவா. எ - று.

பெருஞ்செல்வமுடையவர் அடங்கிநடப்பரென்பது கருத்து.

ஆக்கம் - ஆக்கிக்கொள்ளப்படுவதாகிய கல்வியும் பொருளு மெனப்பட்ட செல்வம். மீச்செலவு - தமக்குரிய அளவுகடந்து சொல்லினுஞ் செயலினும் மேலேபோதல். (16)

தற்புகழ்ச்சியால்வருங்கேடு

விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையுந் தீதே—புலப்பகையை
வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்.

இ - ள். புலப்பகையை வென்றனம் - பஞ்சப்புலன்களாகிய பகைகளையும் வென்றேம், நல்லொழுக்கில் நின்றேம் என்று - நல்லொழுக்கத்திலும் வழுவாது நிற்கின்றேமென்று கருதி, தம் பாடு தம்மில் கொளின் - தமது பெருமையைத் தம்முள்ளத்திலே மதிப்பாராயின், விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும் - (நூல்களிலே) விலக்கப்பட்டவைகளை ஒழித்து விதிக்கப்பட்டவைகளைச் செய்கின்ற, நலத்தகையார் நல்வினையும் தீதே - நற்குணமுடையாரது புண்ணியமும் பாவமாக முடியும். எ - று

தாம், செய்தோமென்று தம்மைத் தாமே மதிப்பவருடைய புண்ணியச்செயலும் பாவச்செயலாய் முடியுமென்பது கருத்து.

தன்னுயர்ச்சிகருதலாகிய செருக்கு மனத்தினை மாசுபடுத்திப் பாவமும், பழியுங் கேடும் பயத்தலால் நல்வினையுந் தீதேயென்றார். "தன்னை நயந்தொருவன் செய்த தருமங்க ளென்ன பயந்தனவோ" என்றார் **பாரதவெண்பாக்காரர்**. பிற - அசை. (17)

தற்புகழ்ச்சியாலிகழ்ச்சியாதல்

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.

இ - ள். தன்னை வியப்பிப்பான் - (ஒருவன் பலராலுந்) தன்னை நன்குமதிப்பிக்கக் கருதி, தற்புகழ்தல் நன்னீர் சொரிந்து சுடர் தீ வளர்த்தற்று - தானே தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் தண்ணீரை வார்த்து விளக்கினொளியைச் சுவாலிக்கச் செய்நலையொக்கும், வியப்பாவது தன்னை வியவாமையன்றே - நன்குமதிப்பென்று சொல்லப்படுவது தானே தன்னைப் புகழாமையல்லவா, நலம் இன்பம் நய வாமையன்றே - நற்சுகமாவது உலகவின்பத்தினை விரும் பாமையல்லவா. எ - று.

தானே தன்னைப் புகழ்வோன் நல்லுணர்வில்லாத மூட னென்பது கருத்து.

தண்ணீரால் விளக்கவிதலன்றி இருளும் பரத்தல்போலத் தற்புகழ்ச்சியினால் முன்னிருந்த புகழ் கெடுதலன்று இகழ்ச்சியும் பரக்குமென்பது தோன்றத் தற்புகழ்தறீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் என்றார். "தன்னுடைப் பெருமிதத் தினை வியந்தவர் தாழ்ந்து மன்னுயிர்த்தொகை நகைதர வருந்து வர் கண்டீர்" என்பது மகாபாரதம். வியப்பிப்பான் பானீற்று வினையெச்சம். (18)

புகழுடையுமுபாயம்

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்ப தொன்றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

இ - ள். பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் - பிற ராலே நன்குமதிக்கற்பாடு பெறவிரும்புவோன், யாண்டும் மறவாமே நோற்பது ஒன்று உண்டு - எவ்விடத்தும் மறந்து விடாது நியமமாகப் பேணிக் கொள்ளப்படுவதொரு

காரியம் உண்டு - (அதுதான் யாதெனின்) பிறர்பிறர் சீரெல்லாம் தூற்றி - பிறராயுள்ளார் பலருடைய கீர்த்திகளையெல்லாம் அங்கங்கே பலருமறியும்படி எடுத்துச்சொல்லி, சிறுமை புறம் காத்து - (அவர்மாட்டுள்ள) குற்றங்கள் புறத்திலே சிறிதும் பரம்பாமற் காத்து, (பிறர்வசை பேசாமலென்றபடி) யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல் - எவ்வெவர்க்கும் பணிவோடு கூடிய இன்சொற்களைச் சொல்லுதலேயாம். எ - று.

பிறர்வசைகளைப் பேசாதொழித்துப் பிறர் கீர்த்திகளை மாத்திரம் எடுத்துக் கூறுவோன் நன்குமதிக்கப்படுவனென்பது கருத்து.

அடுக்குப் பன்மைப்பொருட்டு. இதனால் நன்குமதிப்புப் பெறுதற்கேற்ற உபாயங் கூறப்பட்டது. (19)

கல்விவழிநில்லார்வார்த்தை

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை—சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

இ - ள். கற்று பிறர்க்கு உரைத்து - நூல்களைக் கற்றுணர்ந்து (அவற்றுள்ள) நன்னெறிகளைப் பிறருக்குப் போதித்தும், தாம் நில்லார் வாய்ப்படூஉம் வெற்றுரைக்கு ஓர் வலியுடைமை உண்டு - தாம் அந்நெறிக்கண்ணே நில்லாதவருடைய வாயின்கட் டோன்றும் பயனின்மொழிக்கும் ஒரு வலியுடைமை உண்டு, (அதுதான் யாதெனின்) சொற்ற நீர் நில்லாதது என் என்று - எமக்கெல்லாம் நன்னெறிகளை எடுத்துரைத்த நீவிர் நன்னெறிக்கண்ணே அமைந்து நில்லாத காரணம் யாதென்று, நாண்

உறைப்ப நேர்ந்து ஒருவன் சொல்லாமே - நாணம் அதி கரிக்கும்படி எதிர்நின்று ஒருவன் சொல்லாதபடி, சூழ்ந்து சொலல் - நன்காலோசித்து உபாயமாகச் சொல்லுதலே யாம். எ - று.

கற்றுணர்ந்தோர் அக்கல்விக்குத் தக நன்னெறிக்கணில்லாது தாம் பிறர்க்கு நன்னெறிகளைப் போதித்தல் வீணென்பது கருத்து.

ஆரவாரமாத்திரைக்கேயன்றிக் கல்வியின் பயனாகிய நன்னெறிக்குக் காரணமாகாமையின் வெற்றுரையென்றார். உண்டோர் வலியுடைமை என்பது புகழ்வதுபோலப் பழித்தல். "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் பேதையிற் பேதை யாரில்" என்பது வள்ளுவர். (20)

ஞானநூல்களைவிற்பவர்

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்—திறப்படூஉந்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்.

இ - ள். பயன்பட தாம் கற்ற பிறர்க்கு விற்பார் - தமக்கு முத்தியின்பமாகிய பயனுண்டாகும்வண்ணம் தம்மாலே கற்றுக்கொள்ளப்பட்ட ஞானநூல்களைத் திரவியங்கருதிப் பிறருக்குச் சொல்பவர், தமக்கு வேறு பயன் உடையார் - தம்முடைய கருத்திற்கு மாறாயுள்ள வேறொரு பயனையுடையவராவர், (அதுதான் யாதெனின்) திறப்படூஉம் தீவினை அஞ்சா விறல் கொண்டு - பலவகைப்பட்ட பாவங்களுக்குமஞ்சாத வீரங்கொண்டு, தென்புலத்தார் கோவினை வேலை கொளல்-தென்புலத்துள்ளார் தலைவனாகிய இயமனைத் தமக்கு வேலை செய்பவனாக ஆக்கிக்கொள்ளுதலேயாம். எ - று.

ஞானநூல்களைத் திரவியநிமித்தம் பிறர்க்குச் சொல்பவர் நரகவேதனைபெறுவரென்பது கருத்து.

திரவியநிமித்தம் ஞானநூல்களைக் கொடுத்தலாகாதென்பதனை,

“ஆணவமாயைகாமியமுயிர்க
ளமலனுமாதிமெய்ப்பொருளே
மாணவகாவிப்பொருள்களேயிவற்றை
வயக்குறும்வாக்கியந்தம்மைப்
பேணுறபருவமடுத்தவர்க்கல்லாற்
பெறும்பயன்புகழ்முதலொன்று
காணியகொடுப்போரவரொடுகாகங்
காணியாக்கைக்கொள்வர்விரைந்தே.”

—தணிகைப்புராணம்.

என்னும் செய்யுளாலறிக. தென்புலத்தார்-தென்றிசைக்கணுள்ள பிதிரர். இயமனை வேலைகொளலாவது தம்மாற் செய்யப்பட்ட பாவங் காரணமாகத் தென்புலமழைத்தல். பாவங்களையாராய்தல், விசாரணைசெய்தல், பலவிதநரகில்விட்டுப் பலவிததண்டஞ் செய்தல் முதலிய அத்துணை வேலைகளையெல்லாம் அவனைக் கொண்டு தமக்குச் செய்வித்தல். (21)

கல்லாதவர்வார்த்தை

கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றூத்தை வாயங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

இ - ள். கற்பன ஊழ் அற்றார் - நூல்களைக் கற்றுணர்தற்குக் காரணமான நல்விதியில்லாதவர், கல்வி கழகத்து ஒற்கமின்று ஊத்தைவாய் அங்காத்தல் - கற்றோர்சவையிலே அடக்கமின்றித் தம்முடைய அசுத்தமாகிய வாயைத்

இறத்தல், மா பறவை புல்லுரு அஞ்சுவ போல்-மிருகங்களும் பறவைகளும் புல்லுருவத்தைக் கண்டு பயப்படுதல் போல, தம் வல்லுரு அஞ்சன்மின் என்ப - தம்முடைய வலிய வடிவத்தைக் கண்டு நீவிர் அஞ்சவேண்டாம் என்று சொல்லுதலேயாம். எ - று.

கல்வியறிவில்லாதவர் கற்றோர் சபையிலே யாதுஞ் சொல்லாது மௌனமாயிருத்தல் நன்றென்பது கருத்து.

அருவருக்குஞ் சொற்கள் தோன்றுதற்கு இடமாதல்பற்றி ஊத்தைவாயென்றார். புல்லுருவாவது தானியங்களைச் சிதையாமல் மிருகங்களும் பறவைகளும் பார்த்துப் பயந்தோடும்படி புல்லாற் செய்து வைக்கப்படும் பாவை. மூடர் சபையிற் பேசுதலில் வேறொன்று குறித்தேற்றப்படுதலால் இது தற்குறிப்பேற்றவணி. (22)

கல்விபெறுதற்குரியவர்

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணகையினர் வாய்ச்சேரா—தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்.

இ - ள். போக்கு அறு கல்வி - குற்றம் நீங்கப்பெற்ற கல்வியும், புலமிக்கார்பால் அன்றி மீக்கொணகையினர்வாய் சேரா-நுண்ணறிவுடையாரிடத்தன்றி மேலாகக் கொள்ளப்படும் பிரபுக்களிடத்திற் சேரமாட்டா, (அதற்குத் திருட்டாந்தம்) தாக்கணங்கும் ஆண் அவாம் பெண்மையுடைத்து எனினும் - அழகிற்சிறந்த இலக்குமிதானும் ஆணுப்பிறத்தலை விரும்புதற்குக் காரணமான பெண்டன்மையுடையதாயினும், பெண் நலம் பேடு கொளப்படுவது இல் -

ஒருபெண்ணால் அநுபவிக்கப்படுமின்பம் ஒருபேட்டினால் அநுபவிக்கப்படுதலில்லை. எ - று.

கல்விப் பொருள் நுண்ணறிவுடையாராலன்றிப் பிரபுக்களாற் பெறற்பாலதன்றென்பது கருத்து.

நலகையினர் - பிரபுக்கள். நகை - ஒளி. ஒளியாவது தாமுளராயகாலத்து அதிகாரம், செல்வம், நன்குமதிப்பு முதலியவைகளாலே மேற்பட்டு விளங்குதலுடைமை. குமரியைக் குமரிகூடி இன்பம்பெறுதல் கூடாமையின் இலக்குமியுந் தான் ஆடவனாகப் பிறந்து கூடி இன்பம்பெற விரும்பும் அத்துணைச் சிறப்புடையதென்பது புலப்படத் தாக்கணங்கும் ஆணவாம் பெண்மை என்றார். பெண்மை - பெண்ணுக்குரிய அழகுடைமை. பேடு - ஆண்டன்மை நீங்கிப் பெண்டன்மை சார்ந்திருப்பது; அலியன்று. அலி - பெண்டன்மை நீங்கி ஆண்டன்மை சார்ந்திருப்பது; பேடும் வேறே அலியும் வேறே என்பதைப் "பெண்ணே வலிதானே பேடோ வென வுரைப்பார்" என்னுங் **கந்தபுராணச்** செய்யுளானுமுணர்க. (23)

அறிவிலார்க்குரைப்பவர்

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங்
குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்.

இ - ள். கற்றன கல்லார் செவிமாட்டி - (ஒருவர்) தம்மாலே வருந்திக் கற்றுணரப்பட்ட நூற்பொருள்களை மூடர் காதுகளிலே புகும்படி எடுத்துச்சொல்லி, கை உறூஉம் குற்றம் தமதே பிறிதன்று - சிறுமையடைதற்குக் காரணமான குற்றம் அறிவின்மையுடைய தம்மாலே வந்ததன்றிப் பிறரொருவராலே வந்ததன்று, தாம் முற்று உணர்ந்தும் அவர்தன்மை உணராதார் - தாம் பல நூல்

முடிபுகளை அறிந்திருந்தும் அந்த மூடருடைய சுபாவத்தை அறியாராயிருத்தலைக் கருதி வருந்தாது, தம் உணரா ஏதிலரை நோவது எவன் - கல்வியைப் போதிக்குந் தம்மை மதியாத பிறர் செயலைக் கருதி வருந்துவது யாது கருதி. எ - று.

தாம் வருந்திக் கற்ற நூற்பொருளை யாதும உணர்வில்லாத மூடருக்குச் சொல்பவர் அவரினும் பெருமூடரென்பது கருத்து.

கந்தபுராணகாரரும் "யாதொர்புத்தியை - அறிவிலார்க்குரைப்பவ ரவரிற்பேதையோர்" என்றார். வடநூலாருள்ளே வாருசி என்பவரும் **நீதிரத்தினம்** என்னும் நூலிலே "பிரமாவே! நூற்றுக் கணக்கான வேறு துக்கங்களைத் தரினுந் தருக; மூடர்க்குபதேசித்தலைமாத்திரம் என் தலையிலே எழுதாதே! எழுதாதே!" என்று வேண்டினர். செல்லத்தக்க நல்வழியிலே விடாமைபற்றி மாட்டி என்றார். நூன்முடிபுகளாவன: "புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க - நல்லவையு ணன்குசெலச் சொல்லுவார்" என **வள்ளுவரி**னும், "வெள்ளைக்கோட்டியும் விரகினிலொழிமின்" எனச **சிலப்பதிகாரத்தி**னும் வருவன போல்வன. (24)

கற்குரைக்காவலர்மதித்தல்

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார்—மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு.

இ - ள். மிகல் மக்கள் வேத்தவை காவார் - உயர்ந்தோர் அரசசவையை எதிர்நோக்கிக் காத்துநிற்கமாட்டார், (ஆயினும் அரசராலே அழைத்துபசரிக்கப்பட்டு மகிழ்வடைவர்) வேறு சிலர் அது காத்துக்கொண்டு ஆங்கு உவப்பெய்தார் - அவரல்லராய சிறியோர் சிலர் அரச சவையைப் பொருட்படுத்தி இடைவிடாது காத்துநின்றும்

அவ்வரசரால் மதிக்கப்பெற்று மகிழ்வடையமாட்டார், (அதற்குத் திருட்டாந்தம்) பூனை மா தகைய அந்தப் புரத்தது - பூனையானது பெருஞ்சிறப்புடைய அந்தப் புரத்தையே இடைவிடாது காத்துநிற்குமியல்புடையது, (ஆயினும் உணவு முதலியவைகளாலே உபசரிக்கப்பட்டு மகிழ்வடையமாட்டாது) கந்து கொல் பூட்கை களிறு புறங் கடைய - தூணையுமழிக்கும் வலியுடைய யானையோ கடைவாயிலிலே நிற்குமியல்புடையது, (ஆயினும் உணவு முதலியவைகளினாலே உபசரிக்கப்பட்டு மகிழ்வடையும்.) எ - று.

உயர்ந்தோர் தம்மைப் பராமுகஞ் செய்வாராயினும் அரசர் அவரை வருந்தி யழைத்து நன்குமதிப்பரென்பது கருத்து.

"பல்லோருள்ளு மூத்தோன் வருகவென் னாதவருள் அறிவுடையோனா றரசுஞ்செல்லும்" என்பது **புறநானூறு**. அந்தப்புரம் - அரசன்றேவியிருக்குமிடம். (25)

அரசன்

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலமுகப் பைம்பூ ணிறை.

இ - ள். குலமட்கு கொழுநனே தெய்வம் - குலத்திற் பிறந்த மகளுக்கு நாயகனே தெய்வமாகும், மன்ற புதல்வர்க்கு தந்தையுந்தாயும் தெய்வம் - புத்திரர்களுக்குப் பிதாவும் மாதாவுமே தெய்வமாகும், அறவோர்க்கு அடிகளே தெய்வம் - பிரமசரியவறத்தினருக்குக் குருவே தெய்வமாகும், அனைவோர்க்கும் இலை முகம் பை பூண் இறை தெய்வம் - எல்லாருக்கும் இலைத்தொழிலமைந்த

முகமுடைய பசிய ஆபரணத்தையணிந்த அரசனே தெய்வமாகும். எ - று.

யாவரும் அரசனைத் தெய்வம்போல மதித்து நடத்தல்வேண்டு மென்பது கருத்து.

அறவோரென்றது பிரமசரியவறத்தோரை. அவரே குருவின்வழி நிற்பவர். மகாபாரத்திலே சாந்திபருவத்திலே "வரவு தேசிகன் வழிப்படல் வியன் மறையுணர்தல் - பரவு நற்றவமிரந்துணல் பகர்தன்முன் னெறியே" எனப் பிரமசரிய விலக்கணங் கூறப்பட்டது. வலியாரால் எளியார் கேடடையாது காத்தல் பற்றி அரசனை அனைவோர்க்குந் தெய்வமென்றார்.

"அரசனே புலகினுக்குயி ராசனே தரும
மரசனே பெருங்கடவுளு மவனிலை யென்னில்
விரைசெய் மாலையாய் மின்னனா் கற்புமெய்ப் பொருளு
முறைசெய் முன்னரிற் றீர்தருமென்கொலோ வுளவாம்"

—மகாபாரதம்.

குலத்திற்குரிமைபற்றிக் கற்புடையாள் குலமகளெனப்பட்டாள்.

குடியோம்பல்

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந்—தண்ணளியான்
மன்பதை யோம்பாதாற் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

இ - ள். கண்ணில் சொலி - செயற்பாலனவற்றைக் கட்குறிப்பினாலே அறிவித்து, செவியின் நோக்கும் இறைமாட்சி - அறியற்பாலனவற்றைச் செவிவாயிலாகக் கேட்டுணரும் அரசியன்மாட்சி, புண்ணியத்தின் பாலதே ஆயினும் - முன்னர்ச்செய்த நல்வினைப்பகுதியால் அமைந்ததேயாயினும், தண் அளியான் மன்பதை ஓம்பாதாற்கு என்னும்- தண்ணிய அருளோடும் மக்கட்பரப்

பினைப் பாதுகாப்புச் செய்யாதவனுக்கு அம்மாட்சி என்ன பயனைக் கொடுக்கும், (அதற்குத் திருட்டாந்தம்) வயப்படை ஆணல்லவர்க்கு என் பயக்கும் - தறுகண்மையையுடைய ஆயுதங்கள் ஆண்டன்மையில்லாத பேடியர்களுக்கு யாது பயனைக் கொடுக்கும். எ - று.

குடிகளை அருளோடும் பாதுகாப்புச் செய்யாத அரசனுடைய அரசியன்மாட்சி சிறிதும் பயன்படாதென்பது கருத்து.

இரகசியங்கள் பிறராலறியப்படிற் பங்கமுறுமென்பதுபற்றிக் கண்ணிற்சொலி என்றும், இருந்துழியிருந்து காரியங்களைக் கேட்டு அறிதல்பற்றிச் செவியினைக்கும் என்றுங்கூறினர். தண்ணளியான் மன்பதையோம்புதலாவது இன்சொற்கூறித் தளர்ந்துழி வேண்டுவன கொடுத்துத் தன்னாலுந், தன்பரிவாரத்தாலும், பகைவர், துட்டர் முதலியோராலும், கொடிய விலங்குகளாலும் பிறவற்றாலும் குடிகள் வருந்தாவண்ணம் பாதுகாத்தல். பேடியர்கைப்படை யாதும் பயன்படாமைபற்றி என்பயக்கும் என்றார். "பகையகத்துப் பேடிகையொள்வாள்" என்பது வள்ளுவர். (27)

வரிவாங்குதல்

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலு மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோற்குக் காண்டுமே மபநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

இ - ள். குடி கொன்று - (தண்ணளியோடும் ஓம்பாது) குடிகளை வருத்தி, இறை கொள்ளும் கோமகற்கு - வரிப்பொருளை வாங்கும் அரசனுக்கு, கற்று மடிகொன்று பால்கொளலும் மாண்பே - (உண்டிமுதலியவற்றாற் பேணிக் கொள்ளாது) கறவைப்பசுவின் மடியை நோவுற வருத்திப் பால்கறத்தலும் நற்செயல்போலக் காணப்படும், குடி

யோம்பி கொள்ளுமா கொள்வோர்க்கு-குடிகளைத் தண்ணளி யோடும் பாதுகாத்து வரிகளை வாங்கவேண்டும் முறையாக வாங்கும் அரசனுக்கு, மாநிதியம் வெள்ளத்தின் மேலும் பல காண்டுமே - பெரியசெல்வம் வெள்ளமென்னுந் தொகையின்மேலும் பலவாக வளர்ந்து பெருகுதலைக் கண்டோமே. எ - று.

குடிகளைத் தழுவியோம்பாது வரிப்பொருளை நெருக்கி வாங்கும் அரசனுக்கு வரிப்பொருளும் வந்து கைகூடாதென்பது கருத்து.

வருத்தி வாங்குதலாவது ஆறிலொன்றுக்கதிகமாக வாங்குதலும் வாங்கவேண்டியவைகளை நெருக்கி வாங்குதலும் பிறவுமாம். குடிகள் தளர்ந்துழி ஆறிலொன்றுதானுமாகா தென்பது சிலநூற்றுணிபு. "குடிதளர் வுற்றகாலைக் கொள் பொருளாறிலொன்றும் விடுவது செய்து" என்பது **விநாயக புராணம்**. கொள்ளுமா கொள்ளலாவது இரத்தத்தினை அட்டையும், பாலினைக் கன்றும், தேனினை வண்டும் கவர்தல் போல வரிப்பொருள்களைச் சிறிது சிறிதாக வாங்கவேண்டு மென மானவதருமசாத்திரங் கூறியவாறே குடிகளிடரடையாமல் அருளோடுமன்போடுங் கவர்தல். "அடிநிழலாரை வருத்தாதுகொண்டாரும் போலாது கோடல்" என்பது **பழமொழி**. "குடிகளையோம்பாது வரிவாங்குவோன் நரகமடைவனென்பது" **பிரமாண்டபுராணம்**. (28)

கொடுங்கோன்மை

இன்று கொளற்பால நாளைக் கொளப்பொருள்
நின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவன்
ஆவன கூறி னெயிறலைப்பா னறலைக்கும்
வேடலன் வேந்து மலன்.

இ - ள். இன்று கொளற்பால நாளை கொள பொருள்— இன்றைக்கே பெற்றுக்கொள்ளற்பாலனவாகிய வரிப்

பொருளைக் குடிகளின்றைக்குத் தரவியலாதென்புழி அதனை நாளைக்குப் பெறலாமென்று பொறுத்திருக்கமாட்டான், நின்று குறையிரப்ப நேர்படான் - முன்னிலையிலே நின்று தங்குறைகளைச் சொல்லி யாசித்தும் வேண்டுவன பெறுதற்குக் காட்சிக்கெளியனாய் அத்தாணியிலே வந்திருக்க மாட்டான், சென்று ஒருவன் ஆவன கூறின் எயிறலைப்பான் - ஒருவன் போய்த் தனக்குவேண்டியவைகளைச் சொல்லின் அன்போடு கேளாது பற்கடித்துறுக்குவான், (இவ்வியல்புடையவன்) ஆறலைக்கும் வேடலன் - வழிச் செல்வோர் பொருளைப் பறிக்கும் வேடனேயெனிலவனு மல்லன், வேந்தும் அலன் - அரசனுமல்லன். எ - று.

குடிகளுடைய தளர்வுகண்டிரங்காதவனும் குறை முறைகளைக் கேளாதவனுமாகிய அரசன் வழியினின்று பொருள்பறிக்கும் மறவனினுங் கொடியனென்பது கருத்து.

சாதிதருமமாகிய வழிப்பறித்தலையும் வாய்ப்புழி ஒருகால் நேர்நின்று செய்யும் வேடனினும் அரசவேடத்துள்ளே மறைந்து நின்று பலமுறை தன்கீழ்வாழுங் குடிகளை வருத்திப் பறிக்கும் இவன் கொடியனாதல்பற்றி வேடலன் என்றும், காட்சிக்கெளியனாதன் முதலியவின்மைபற்றி வேந்துமலன் என்றுங்கூறினர்.(29)

அரசபோகமயக்கம்

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்ணு—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொள்ளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

இ - ள். முடிப்ப முடித்து - முடிக்கப்படுவனவற்றை முடித்து, பின் பூசுவ பூசி - அதன்பின்னர்ப் பூசப்படுவனவற்றைப் பூசி, உடுப்ப உடுத்து - உடுக்கப்படுவனவற்றை

உடுத்து, உண்ப உண்ணு - உண்ணப்படுவனவற்றையுண்டும், இடித்து இடித்து கட்டுரை கூறில் - நெருக்கிநெருக்கி உறுதிவார்த்தைகளைச் சொல்லில், செவிக்கொள்ளாகண் விழியா - அவைகளைச் செவிகொடுத்துக் கேட்டுணராது, முன்னிற்பவரைக் கண்விழித்துப் பாராது, (இவ்வியல் புடையது யாதெனின்) நெட்டுயிர்ப்போடு உற்ற பிணம் - நெடுமூச்சோடு பொருந்திய பிணமேயாம். எ - று.

அரசர்க்குரிய வேஷங்களைத் தரித்தவனாயினும் அமைச்சர் சொற் கேளாதவனுங் குடிகண்மேலே அருளில்லாதவனும் பிணத்தோடொப்ப னென்பது கருத்து.

மூடிப்பன - மூடியிலணியப்படுவன. பெருஞ்செல்வம், பெருந்தலைமை, பெருங்காமம் முதலியவைகளிலே பெரிதும் மயங்கிச் செய்வனவுந் தவிர்வனவு மறியாமைபற்றிப் பிண மென்றார்.

"அரிசனம் பூசிமாலை யணிந்து பொன்னுடைசாத்திப்
பரிசனமுன்பு செல்லப் பாரகர்பரிக்கக் கொட்ட
வரிசின்ன மூதத்தொங்கல் வந்திட வுணர்வுமாண்டு
பெரியவர் பேச்சுமின்றிக் கிடத்தலாற்பிணத்தையொப்பர்"

—சித்தியார்.

என்பது பிணமென்றது அறிவில்லாத அரசனை என்பது ஒட்டணியைகையாற் பெறப்படும். (30)

அரசநீதி

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்ந்துமெனப்
பொற்றோ டுணையாத் தெரிதந்துங்—குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று.

இ - ள். ஒற்றின் செரியா - வேவ்வுகாரன் வழியாக நிச்சயித்தறியப்படாத காரியங்களைச், சிறைப்புறத்து ஓர்தும் என பொன் தோள் துணையா தெரிதந்தும் - ஒதுக்கிடத்திலே சென்று நின்று நாமேயறியக்கடவே

மென்று கருதி அழகிய புயங்களே துணையாகச்சென்று ஆராய்ந்தறிந்தும், குற்றம் அறிவு அரிதென்று அஞ்சுவதே செங்கோன்மை - ஒருவர்மாட்டுள்ள குற்றங்களைத் துணிவு பெற அறிந்துகொள்வது கூடாதென்று தண்டஞ் செய்தற்குப் பயப்படுவதே அரசநீதியாகும், சென்று முறையிடினும் கேளாமை அன்று - ஒருவன்போய்த் தன்பாலடைந்த இடரை அறிவித்தும் அதனைக் கேட்டறிந்து நீக்காமை யரசநீதியன்று. எ - று.

அரசன் தான் நேரே சென்றறிந்த காரியத்தினுந் துணிபு பெறாது அதனைப்பின்னுமாராயவேண்டுமென்பது கருத்து.

அரசன் தானே விசாரணைசெய்தறிவதே நீதியாகப் பிறர் அறிவித்தழியுங் கேட்டறிந்து செயற்பாலன செய்யாமை பெரிதும் அநீதியே என்பதுதோன்றமுறையிடினும் என்றார். ()

அரசனுக்குப்பேரறிவு

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொல்லார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

இ - ள். ஏதிலார் யாதும் புகல - பக்கத்துள்ளோர் யாதெனினுஞ் சொல்லக்கடவர், இறைமகன் கோது ஒரீஇ கொள்கை முதுக்குறைவு - அதனைக்கேட்டு விசாரணை செய்பவனாகிய அரசன் குற்றமுள்ளவைகளை நீக்கிக் குணமுள்ளவைகளைக் கைக்கொண்டு தீர்ப்புச்செய்தல் அவனுக்குப் பேரறிவாலாய செயலாகும், நேர் நின்று காக்கை வெளிதென்பார் என்சொல்லார் - எதிரேநின்று கருநிறமுடைய காகத்தினை வெண்ணிறமுடையதென்று சொல்லுவோர் எந்தப்பொய்யைத்தான் சொல்லமாட்டார்

கள்? தாய்க் கொலை சால்புடைத்தென்பாரும் உண்டு - தாயைக் கொல்லுதலாகிய கொடும்பாவத்தினைத்தானும் குணமுள்ள நற்செயலென்று நியாயங்காட்டிச் சாதிப்பவர் களும் உலகத்திலே இருக்கின்றனர். எ - று.

பிறர் சொல்வனவெல்லாங் கேட்டுப் பொய் மெய்களைப் பொருந்துமாற்றானும் பிறவாற்றானும் உள்ளவாறுணர்ந்து மெய்யாயுள்ளவைகளைக் கொள்ளுவது அரசனுக்குப் பேரறிவாகும் என்பது கருத்து.

பொய்யாவது மெய்யாவது போலி நியாயமாவது சொல்லினு மென்பது தோன்ற யாதும் புகல என்றார். புகல என்பது அகர வீற்று வியங்கோண்முற்று. உலகத்தார் தங்கள் தங்கள் கருமத்துக் கிசையக் கூறுவதைப் பகுத்தறியு மறிவில்லாதவன் அரசனெனப்படான்

"எவ்வுரை யெவர் சொற்றாலுந் தன்னறிவேற நோக்கி
யவ்வுரை யுண்மையன்மை யறிபவ னறிவு ளோராம்
கைவரு முலகிற்றத்தங் கருமத்துக் கேற்பச் சொல்வர்
அவ்வகை யுணரக்காதை யறைகுவன் கேட்டிமன்னோ."

—**மகாபாரதம்: சாந்திபர்வம்.**

என நீதிவிசாரணை கூறப்பட்டது.

அக்கதையாவது: விதிசையென்னும் நகரிலே ஒருவனிறந்து விடப் பலருங்கூடி அபரக்கிரியை செய்யும்படி அப்பிணத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அங்கே பசியோடுவந்த ஒரு கழுகு அப்பிணத்தை உண்ணக்கருதி, "நீங்கள், கொடிய பிசாசுகளுலாவும் இக்காட்டிலே இம்மாலைக்காலத்திலே நின்றகப் படாமல் ஓடுங்கள்" என்றது. அவர்களுமோடினார்கள். அதனை நரியொன்று தானுண்ணக் கருதி, "சிறிதுநேரம் நின்றுபாருங்கள் அவ்வுயிர்மீண்டுவரும்" என்றது. அதனை நம்பி அவர்கள் திரும்பி வருதலைக் கழுகு கண்டு "ஆயிரத்து முந்நூறு வருடம் வரையில் யானறிவேன். இறந்தவர் பிழையார்" என்றது. அவர்கள் பின்னும் நம்பிப் போயினர். அதனை நரிகண்டு இறந்து பிழைத்தவர் சிலரைச் சொல்லித் தடுத்தது என்பதேயாம். (32)

அறிவில்லாவரசர்

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து.

இ - ள். கேடு கண்கூடு ஆ பட்டது எனினும் - தமக்குக் கெடுதியை விளைப்பது தமது கண்ணுக்கெதிரே வந்ததாயினும், உணர்ச்சி கீழ்மக்கட்கு உண்டோ இல்லாகும் - அதனை நீங்குதற்கேற்ற நல்லுணர்வு மூடரிடத்திலுண்டோ இல்லையேயாம், (அதற்குத் திருட்டாந்தம்) மண்டு எரிதான் வாய் மடுப்பினும் - நெருங்கிய அக்கினியானது தன் வாய்க்குள்ளாகக் கொண்டாலும், மாசுணம் பேரா பெருமூச்செறிந்து கண்டுயில்வ - பெரும்பாம்புகள் அசைவின்றிப் பெருமூச்சும் விட்டு நித்திரையாய்க் கிடக்கும். எ - று.

மூடர்களுக்கு எதிரேவருந் தீங்குதானும் புலப்படாதென்பது கருத்து.

கண்கூடு - பிரத்தியக்ஷம். மடுத்தல் - இடைப்படுத்தல். வரக்கடவதாகிய தீங்கினை முன்னரறிந்து காத்தலே அறிவுடையார் செயலாக வந்தும் உணராமைபற்றி எனினுமென்றார். (33)

அரசர்க்குக்கேடுபயப்பன

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி.

இ - ள். நட்பு பிரித்தல் - நண்பனைப் பகைவனுக்கிக் கொள்ளுதல், பகை நட்டல் - பகைவனை நண்பனுக்கிக்

கொள்ளுதல், ஒற்று இகழ்தல் - ஒற்றனுயுள்ளோனைப் பராமுகஞ்செய்து நீக்குதல், பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் - அமைச்சர்களெல்லார்கண்ணும் ஐயங்கொள்ளுதல், தக்கார் நெடுமொழி கோறல் - பெரியோர்கூறும் உறுதிமொழிகளை அழித்தல், பிறிது குணமாதல் - அந்நியகுணங்களையடைதல், (எனச் சொல்லப்பட்ட இவைகள்) கெடுவது காட்டும் குறி - தான் கேடுஅடைதலை முன்னரறிவிக்குங் குறியாகும். எ - று.

நட்புப்பிரித்தல் முதலாக இங்கே சொல்லப்பட்ட ஆறும் அரசனுக்குக் கேடுவிளைக்குமென்பது கருத்து.

ஒற்றிகழ்தலாவது ஒற்ருபுள்ளார்க்குவேண்டுஞ் சிறப்புச் செய்யாதுவிடுதல். பகைவர்முதலியோரிடத்து நிகழ்வன அறிதலிலே கண்போன்றிருத்தலின் இகழ்தலாகாதென்க. எப்போதுஞ் சமீபத்திருத்தல்பற்றி மந்திரிகள் பக்கத்தாரெனப் பட்டார். அமாத்தியர் என்பதும் அப்பொருட்டு. தக்காரென்றது அமைச்சர் புரோகிதர் முதலியோரை. அந்நியகுணங்களாவன: வேட்டைவிருப்பு, சூதாடல்விருப்பு, கூத்துவிருப்பு முதலியனவும், துரோகம், பொருமை, நிந்தை முதலியனவுமாம். (34)

பெரியோரைப்பிழைத்தல்

பணியப் படுவோர் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பிறற் ருழ்வார்க்—கணிய
திளையாண் முயக்கெனினுஞ் சேய்த்தன்றே மூத்தாள்
புணர்முப் போகங் கொளல்.

இ - ள். பணிய படுவோர் புறங்கடையர் ஆக - தம்மாலே வணங்கப்படத்தக்கோராகிய பெரியோர் தம்மைக் காண்பது கருதி வந்து தமது தலைவாயிலின்கண்ணே இருப்பவராக, தணிவில் களிப்பினல் தாழ்வார்க்கு - இருக்கை

விட்டெழுந்து சென்றவரை உபசரியாமல் அமைவற்ற களிப்பினாலே தாமசஞ்செய்வோர்க்கு, அணியது இளையாள் முயக்கு எனினும் - அணுகியிருப்பது இலக்குமியினுடைய சேர்க்கையாயினும், மூத்தாள் போகங்கொளல் சேய்த்து அன்று - மூதேவியினுடைய போகத்தை அனுபவித்தல் தூரத்ததன்று. எ - று.

தம்மிடம்வந்த பெரியோர்களை விரைந்தெதிர்கொண்டு உபசரியாதவர் தமது செல்வங்களெல்லாம் விரைந்துகெடப் பெறுவர் என்பது கருத்து.

புணர்முலை நெருங்கிய ஸ்தனம். களிப்பாவது அதிகாரம் குலம் செல்வமுதலியவற்றால் யாவரினுந் தம்மை மிக்கோரெனக் கருதும் மயக்கம். (35)

சான்றாண்மை

கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

இ - ள். கண் நோக்கு அரும்பா - விரும்பிப் பார்க்குங் கட்பார்வையே அரும்பாக, நகை முகமே நாள் மலரா - மலர்ந்த முகமே புதிய பூவாக, இன்மொழியின் வாய்மை தீங்காயா - இனிய சொல்லொடு கூடிய உண்மையே சுவையுடைய காயாக, வண்மை பலமா - கொடையே பழமாக, நலம் கனிந்த பண்புடையார் அன்றே - நன்மை கனிந்த பண்புடையாரன்றே, சலியாத கற்பதரு - அசைவில்லாத கற்பகவிருக்ஷமாம். எ - று.

விரும்பிப்பார்த்தல் முகமலர்ச்சிமுதலிய குணங்களையுடைய அரசன் கற்பகதருப்போலப் பயன்படுவனென்பது கருத்து. (36)

அரசவீகை

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

இ - ள். வாங்கும் கவளத்து ஒருசிறிது - தான் வாங்கியுட்கொள்ளுகின்ற கவளத்தினின்றும் ஓரற்பபாகம், வாய் தப்பில் தூங்குங் களிறோ துயருறா - வாயினின்றுந் தவறிக் கீழே விழுமாயின் தூங்குமியல்புடைய யானைகளோ அதனாலே துன்பமடையா, இங்கு ஊரும் எறும்பு ஒரு கோடி ஆங்கு அதுகொண்டு - இவ்வுலகத்திலே ஊருகின்ற எறும்புகளுள்ளே எத்தனையோ பல அங்கே விழுந்த அப் பாகத்தினை எடுத்துக்கொண்டுபோய், ஆரும் கிளையோடு அயின்று உய்யும் - நிறைந்த சுற்றத்தோடு கூடியுண்டு சீவிக்கும். எ - று.

பெருஞ் செல்வமுடையவர் அதனில் ஓரற்பபாகத்தைத் தானமாக விடுவாராயின்; அதனால் எத்தனையோ சீவராசிகள் சீவிக்கும் என்னுங் கருத்து யானை வாயினின்றுந் தவறிய அற்ப வுணவினால் ஒருகோடி எறும்புகள் சீவிக்குமென்பதனால் ஒட்டணியாகக் கூறப்பட்டது.

கவளம்-ஒருமுறை வாய்க்கொள்ளும் உணவினளவு. பெருஞ் செல்வமுடையார்க்கு ஓரற்பத்தொகையைத் தருமவழியிலே விடுதல் ஒன்றிழந்ததுபோலாகித் துன்பங்கொடாதென்பது தூங்குங் களிறோ துயருறா என்பதனாற்பெறப்படும். (37)

கண்ணோட்டம்

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையி னேக்கழுத்த மிக்குடைய—மாகொல்
பகைமுகத்த வொள்வேலான் பார்வையிற் றீட்டும்
நகைமுகத்த நன்கு மதிப்பு.

இ - ள். மா கொல் பகை முகத்த ஒள் வேலான் - யானையைக் கொல்லுஞ் சிங்கத்தின் தன்மையைத் தன்னிட் முடைய ஒளிபொருந்திய படையையுடைய அரசன், நகை முகத்த பார்வையில் நிட்டும் நன்குமதிப்பு - மகிழ்ச்சி நகை யோடுகூடிய முகத்திலுள்ள இனிய நோக்கினலேலே பதியச் செய்யும் நன்குமதிப்பு, மாகம் சிறுக நிதிக்குவை குவித்து - ஆகாயமுஞ் சிறியதாகத் திரவியக்குவைகளை அதிகமாகக் குவித்துவைத்து, ஈகையின் ஏக்கழுத்தம் மிக்குடைய - அவைகளை அள்ளிக் கொடுத்தலினும் இறுமாப்புக் கொடுத் தலைப் பெரிதுமுடையதாகும். எ - று.

அரசனிடத்திலே பெரும்பொருள் பெறுதலினும் அவனாலே நன்குமதிப்புப்பெறுதல் ஒருவருக்கு மிக்க இறுமாப்பினைக் கொடுக்குமென்பது கருத்து.

வெளியிடமெல்லாம் பிடித்துப் பரந்துகிடக்கும் பெருங் குவையென்பது அறிவித்தற்கு மாகஞ்சிறுக என்றார். ஏக்கழுத்த முடைமையாவது அரசன் நம்மேலே பிரியமுடையவனாயிருக் கின்றான் இனி நமக்கு யாதுங் குறைவில்லை யாமொன்றுக்கு மஞ்சோமென்று களித்து மேலே கிளர்ச்சிகொள்ளுதல். ஏக்கழுத் தம் - தலையெடுப்பு. (33)

அடைந்தோர்ப்புரத்தல்

களைகணாத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம்.

இ - ள். ஊனுடம்பு தளர்நடையது என்று - இறைச்சி யாலாகிய இவ்வுடம்பு பிணி மூப்பு முதலியவைகளாலே தளர்ந்தழியுந் தன்மையுடையதென்று அதனைப் பேணுது விட்டு, தாம் புகழுடம்பு ஓம்புதற்கே உடம்பட்டார்கள் -

தாம் புகழாகிய உடம்பினைப் பேணிக்கொள்ளுதற்குத் துணிந்துடன்பட்டவர்கள், உற்றுழி களைகண் ஆ தம் அடைந்தார்க்கு - ஓரிடருற்றுழி அவ்விடரினின்று காக்கும் பற்றுக்கோடாகக் கருதித் தம்மையடைந்தவருக்குப் பயனாக்காது, மற்று ஓர் விளைவு உன்னி - வேறொரு பிரயோசனங் கருதி, வெற்றுடம்பு தாங்கார் - வெறுமையாகிய இவ்வுடம்பினைப் பாதுகாத்துக்கொள்ள நினையார். எ - று.

இசைபடவாழ்தலை விரும்புவோர் தம்முடம்பை விட்டாவது பிறர்துயரை நீக்கிப் புகழை நிலைபெறுத்துவரென்பது கருத்து.

உம் - அசை. விளைவு - விளையும்பயன். "எவரெனினுமிட ருற்றனராகி - யோவில்குறையொன் றுளரேலதுமுடித்தற் - காவி விடினுமறனே" என்பது கந்தபுராணம். (39)

வலியுமானமும்,

தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக—பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

இ - ள். தம்முடை ஆற்றலும் மானமும் தோற்று - (ஒருவர்) தம்முடைய வலிமையையும் பெருந்தகைமையையுமிழந்து, தம் இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக - தம்முடைய இனிய உயிரைக் காப்பாராயினும் அஃதமையும், பின்னர் சிறுவரை ஆயினும் மன்ற தமக்கு ஆங்கு இறுவரை இல்லையெனின் - பின்னர் ஒருகணப்பொழுதாவது நிச்சயமாகத் தமக்கு அவ்வுயிர் இறவாதிருக்குமென்று துணியப் படுமாயின். எ - று.

வலியும் மானமும் உயிரினும் காத்தற்பாலனவென்பது கருத்து.

மானமாவது என்றுந் தந்நிலையிற் றாழாது, பிறரால் நீக்குதற் கரிய இடரை நீக்குதன் முதலிய அருஞ்செயலாற் பெறும் பெருந் தகைமை. அதனை உயிர்விடுத்தாவது காத்தல் நன்று,

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து."

—வள்ளுவர்.

இறுவரை - மரணகாலம். (40)

மானங்காப்பவர்

கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாருங்—கொலைஞாட்பின்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூ டினும்.

இ - ள். கலன் அழிந்த கற்புடைப் பெண்டிரும் - மங்கலநாணிழந்து விதவைகளாயிருக்குங் கற்புடைமக ளிரும், ஐந்து புலன் ஒருங்க பொய் ஒழிந்தாரும் - ஐம்புலன் களும் ஒரேவழியிற் செல்லவிட்டுப் பொய்யாகிய உலகப் பற்றினை முற்றத் துறந்தவரும், கொலை ஞாட்பின் மொய்ம்புடை வீரரும் - கொலைத்தொழிலைச் செய்யும் யுத்தத்திலே வலிமையுடைய வீரரும், முரன் மறலி தும்பை முடி சூடினும் அஞ்சார் - வலிமையுடைய இயமன் தும்பைமாலை சூடிவரினும் பயப்படமாட்டார். எ - று.

கற்புடைய அமங்கலிகளும் துறவிகளும் போர்வீரரும் மரித் தற்கு மஞ்சாது தம்மானத்தைக் காப்பரென்பது கருத்து.

போர்க்குச் செல்வோரணியு மாலையாகிய தும்பைமாலையைச் சூடுதல்பற்றி இயமன் உயிர்கவர வருதல் துணியப்படும். (41)

உடல்விடுதற்கஞ்சாதவர்

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோ டுதற்கு.

இ-ள். விழலர் - நல்லுணர்வில்லாத வீணர், புழுநெளிந்து புண் அழுகி - (தம்முடம்பு) புழுக்கள் நெளியப்பெற்று புண்கள் அழுகுதலால், யோசனை நாறும் கழிமுடை நாற்றத்தவேனும் - யோசனை தூரத்துக்கு நாறுகின்ற மிக்க முடைநாற்றத்தை யுடையதாயினும், விளிவு உன்னி வெய்துயிர்ப்பர் - அவ்வுடம்பு அழிதலைக்கருதித் துக்கித்துப் பெருமூச்சுவிடுவர், மெய் பயன்கொண்டார் சுமைபோடுவதற்கு சுளியார் - மெய்யாகியபயனைப் பொருளாகக்கொண்ட அறிஞர் உடம்பாகிய சுமையைக் கைவிடுதற்கு வெறுப்புக்கொள்ளார். எ-று.

நல்லுணர்வில்லாத வீணரன்றி மெய்ப்பயனுடையவர்கள் இறத்தற்கஞ்சாரென்பது கருத்து. (42)

அரசனைப்படிகுடிகளுமப்படி

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினு மொக்கப் புகழ்ப—இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை.

இ-ள். இறைமகன் ஒன்று இகழின் இகழ்ந்து - அரசன் ஒன்றினை இகழ்தற்கண் தாமுமிகழ்ந்து, ஆங்கு புகழினும் ஒக்க புகழ்ப - அப்படியே புகழ்தற்கண்ணுந் தாமுங்கூடப் புகழ்வார்கள், மன்பதை இகல் மன்னன்

சீர்வழிப்பட்டதே - மக்கட்பரப்பு வலிய அரசனுடைய காந்தி செல்லும் வழியிலே அமைந்ததாகும், (அதற்குத் திருட்டாந்தம்) நீர்வழி பட்ட புணை என் செய்யும் - நீர் பெருகிச் செல்லும் வழியிலகப்பட்ட தெப்பமானது நீரோடுகூடச் செல்லாது வேறெங்கே போகும்? எ - று.

அரசனெப்படி நடப்பானோ அப்படியே குடிகளும் நடப்பார்களென்பது கருத்து.

காந்தியாவது அரசனுறங்கினுஞ் சென்றுலகங்காக்கும் அவனது கடவுட்டன்மை. "உறங்குமாயினும் மன்னவன் றன்னொளி கறங்குதெண்டிரை வையகங்காக்குமால்" என்பது சிந்தாமணி.

அமைச்சு

செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா—கவுண்மதத்த
கைம்மா வயத்தவே பாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே யமைச்சு.

இ - ள். சென்று செவி சுட இடித்து அறிவு மூட்டி - சமீபமாகப்போய்க் காதிலே சுடும்படி நெருக்கி அறிவைக் கொளுத்தி, வெகுளினும் வாய் வெரீஇ பேரா - தம்மேலே கோபித்தாலும் பயந்து விட்டுப்போகார், பாகு எத் திறத்தும் கவுள் மதத்த கைம்மா வயத்தவே - பாகர்கள் எவ்விதத்தாலும் கன்னமதத்தையுடைய யானையின்வசமாகி அதனை நடத்துபவரேயாவர், அமைச்சு அ மாண்பினவே - அமைச்சரெனப்படுவோரும் அவ்வாறே அரசன்வசமாயொழுகி அவனைத் தீ நெறியில் விடாது நடத்துபவரேயாவர். எ - று.

அரசன் கோபித்தபோதும் அவனைவிட்டு நீங்காது நின்று நற்புத்தி கூறுவோரே அமைச்சரெனப்படுவாரென்பது கருத்து.

ஆங்கு - அசை. யானை தீயவழிச்செல்லும்போது பாகர் விலக்குதல்போல அமைச்சரும் அரசர் வழிவிலகும்போது அறிவு கொளுத்தி நல்வழியில்விடல் வேண்டும். "மன்னவர்செவியழன் மடுத்ததாமென நன்னெறிதருவதோர் நடுவு நீதியைச் சொன்னவ ரமைச்சர்கள்" என்பது **கந்தபுராணம்.** (44)

அரசனைச்சேர்ந்தொழுகல்

கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க—ஒவ்வொருகால்
எண்மைய னேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெயர்ப்பி னன்.

இ - ள். வேந்தன் நமக்கு கைவரும் என்று - அரசன் நமக்கு அமைவானென்று கருதி, காதலித்த செவ்வி தெரியாது உரையற்க - சொல்லவிரும்பியவைகளைக் காலம் நோக்காமற் சொல்லுதலை ஒழிக, ஒவ்வொருகால் எண்மையனேனும் - சிலசிலபோது காட்சிக்கெளியனாய்க் காணப் பட்டானேனும், பெரிது அரியன் - பெரும்பாலும் காண்டற்கும் பேசுதற்குமரியனாவன், கண்ணிலன் உள்வெயிர்ப்பினன் - கண்ணோட்டமில்லாதவன், உள்ளத்தே சினமுமுடையவன். எ - று.

அரசனோடு பேசும்போது ஏற்றகாலமறிந்து பேசுதல் வேண்டுமென்பது கருத்து.

அரசன் தன்தருமத்தை முடிக்கும்படி அடிக்கடி பலவடிவங் கொள்ளுவான் என மனுக்கூறுதலால் முன்னர்ப் பழக்கம்பற்றிக் கைவரும் என்றெண்ணல் பழுதாம். "குறிப்பறிந்து காலங்கருதி வெறுப்பில வேண்டுப வேட்பச் சொலல்" என்பது **வள்ளுவர்.** ()

அரசகோபம்

பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லை யவர்க்கு.

இ - ள். பழமை கடைப்பிடியார் - பழகட்பினையும் மனத்திற் கொள்ளார், கேண்மையும் பாரார் - உறவாந் தன்மையினையும் நோக்கமாட்டார், கிழமை பிறிது ஒன்றும் கொள்ளார் - உரிமையாயுள்ளன வேறொன்றையுங் கொள்ளார், வெகுளில் இறைமாண்டார்க்கு காதன்மை உண்டே - கோபமுறுவாராயின் நடுநிலையிற்சிறந்த அரசர்க்கு ஒருவர் மேலே விருப்பமாந்தன்மையு முளதாகுமா? அவர்க்கு ஏதிலரும் ஆர்வலரும் இல்லை - அரசருக்கு வெறுப்புள்ளவருமில்லை விருப்புள்ளவருமில்லை. எ - று.

அரசர் கோபிப்பாராயின் இவருறவர் இவர் பகைஞரென ஒன்றும் நோக்காரென்பது கருத்து.

பழமை - பழையராந்தன்மைபற்றி வந்த நட்பு. "மன்னரை யடைந்துவாழ்தல் வஞ்சநஞ்சுடையநாகந் தன்னொடு கூடிவாழுந் தன்மை" என்பது வாதவூரர் புராணம். (46)

அரசர்புறங்கடைகாத்தல்

மன்னர் புறங்கடை காத்தும் வறிதேயாம்
எந்நலங் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாட்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க்கை கொடுத்து
வேத்தவை மிக்குச் செயும்.

இ - ள். *யாம் மன்னர் புறங்கடை வறிதே காத்தும் - நாம் அரசருடைய கடைவாயிலை வீணாகக் காத்துநின்றேம், எ நலம் காண்டும் என்று எள்ளற்க - அவ்வாறு காத்து நின்றும் எந்த நன்மையைப் பெற்றேம் என்றிகழாதொழிக, நெடுநாள் காத்தவை எல்லாம் - மிகப் பலநாளாகக் காத்து நின்றனவெல்லாம், கடைமுறை போய் - அரசன் மனத் திலே கிடந்து இறுதிமுறையிற் போய், கைகொடுத்து வேத்தவையின் மிக்கு செயும் - கைகொடுத்துத் தூக்கிக்*

கொண்டுபோய் அரசசவையிலே யார்க்கும் மேலேயிருத்து தலைச் செய்யும். எ - று.

அரசரையடுத்துநின்று பலநாட் சேவிப்போரே பெருமை பெறுவரென்பது கருத்து.

அரசரும் மகளிரும் அடுத்துநின்று சேவிப்போரையே பற்றுவர். "மன்னர் திருவு மகளிரெழினலமுந் துன்னியார் துய்ப்பர்" என்பது நாலடியார். (47)

முயற்சி

உறுதி பயப்ப கடைபோகா வெனினும்
இறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்க நீதன்று லல்லனபோ
லாவனவு முண்டு சில.

இ - ள். உறுதி பயப்ப கடைபோகா எனினும் - (தாம் செய்யத் தொடங்கிய காரியம் அநுகூலமாகுமென்னும்) நிச்சயத்தைக் காண்பிப்பனவாய்ச் செல்வனவல்லவாயினும், இறுவரை காறும் முயல்ப - அதன் முடிவுபரியந்தம் விடாது செய்வார்கள், இறும் உயிர்க்கும் ஆயுண்மருந்து ஒழுக்கல் நீது அன்று - இறக்குமெனத் துணியப்பட்ட உயிர்க்குத்தானும் சிவனைக்கொடுக்கும் மருந்தை வாயின் கண் வார்த்தல் குற்றமன்று, அல்லனபோல் ஆவனவும் சில உண்டு - அநுகூலமாகாதனபோலக் காணப்பட்டுப் பின்னர் அநுகூலமாவனவுஞ் சிலவுள ஆதலால். எ - று.

எடுத்துக்கொண்டகாரியத்தை அநுகூலப்படுவதாகத் தோற்றவில்லையென்றிடையில்விடாமல் முடிவுபரியந்தஞ் செய்துபார்க்க வேண்டுமென்பது கருத்து.

கடைபோகா என்புழிக் கடை என்பது தலைப்பிரிதல் கால்சீத்தல் என்பனவற்றில் தலை கால் என்பனபோல நின்ற

ஓரிடைச்சொல். "இசையாதெனினு மியற்றியோராற்று லசைவின்றிநிற்பதாமாண்மை" என்பது நாலடியார். (48)

முயற்சிசெய்யாமை

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா வூழ்த்திறத்த வென்னார்—மயலாயும்
ஊற்றமி றூவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்றா ரெறிகான் முகத்து.

இ - ள். முயலாது வைத்து - (அறிஞர்) முயற்சி செய்யாது விட்டு, முயற்று இன்மையாலே உயலாகா - முயற்சியின்மையாலே உய்வுபெற்றநுகூலமாகாத காரியங்களை, ஊழ்த்திறத்த என்னார் - ஊழின்பகுதியாலே உய்யவில்லையென்று கொள்ளமாட்டார், ஊழுண்மை காண்டும் என்று - ஊழ்வினை உளதென்பதைப் பார்ப்போமென்று கருதி, மயலாயும் - மயங்கித்தானும், ஊற்றமில் தூவிளக்கம் - அசைவின்றிநிற்குந் தன்மையில்லாத ஒளிபொருந்திய விளக்கினை, எறி கால் முகத்து ஏற்றார் - அடிகாற்றுக்கெதிரே வைக்கமாட்டார். எ - று.

அறிஞர் தம்முயற்சியின்மையாலே பிரதிகூலமான காரியத்தை ஊழ்வினையாலாயிற்றென்று சொல்லார் என்பது கருத்து. முயற்சியினால் ஊழினையும் வெல்லலாமென்பது பிற்செய்யுளாற் பெறப்படும். (49)

விதியையும்வெல்லுமுயற்சி

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

இ - ள். உலையா முயற்சி களைகணு - நிலைபேருன முயற்சியே பற்றுக்கோடாக, ஊழின் வலி சிறிதும் வன்மையும் உண்டே - விதியின் வலிமையைக் கெடுத்து மேற்படுகின்ற சாமர்த்தியமும் உள்ளதாகும், உலகு அறிய பால் முளை தின்று மறலி உயிர் குடித்த கான் முளையே கரி - உலகத்தார்க்குப் பிரசித்தமாகப் பலவகையாக வரும் பிறவியென்னும் முளையையுந் தனக்கின்மையாக்கி இயமனுடைய உயிரையுமழித்த மார்க்கண்டேயராகிய புத்திரரே அவ்வுண்மைக்குச் சான்ருவர். எ - று.

முயற்சியினுலே விதியையும் வெல்லுதல் கூடும் என்பது கருத்து.

பதினறு வயசென்னும் நியதியைத் தமது தவத்தினுல் வென்று சிரஞ்சீவித்தன்மைபெற்ற மார்க்கண்டேய முனிவருடைய முயற்சி இங்கே உதாரணமாயிற்று. உலையாமுயற்சி - அசைவில்லாதமுயற்சி. உயிர்குடித்தவர் சிவபிரானேயெனினும் இவர் காரணமாதல்பற்றி இவர்செயலாக உயிர்குடித்த என உபசரித்தார். போலும் - அசை. (50)

தெரிந்துசெய்தல்

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும்.

இ - ள். காலம் அறிந்து - காலத்தினையுமறிந்து, இடம் அறிந்து - இடத்தினையுமறிந்து, செய் வினையின் மூலம் அறிந்து - செய்யக்கருதிய காரியத்திற்கு வேண்டுங் காரணங்களையுமறிந்து, விளைவு அறிந்து - செய்து முடிந்தபின் அதனுற்பெறும் பயனையுமறிந்து, மேலும் சூழ்வன தாம் சூழ்ந்து - அதன்பின்னும் ஆலோசிக்கப்படுவன

வற்றையுந் தாம் ஆலோசித்து, துணைமை வலி தெரிந்து - துணையாயுள்ளோர் வலிமைகளையுந் தெரிந்து, ஆள்வினை ஆளப்படும் - (அதன்பின்) முயற்சி செய்யப்படும். எ - று.

காலம் இடம் முதலியன தமக்கு வாய்ப்புடையனவாயின்; கருதிய காரியத்தைச் செய்யமுயல்க என்பது கருத்து.

இது பெரும்பாலும் போர்த்தொழின்முயலும் அரசர் பொருட்டுக் கூறப்பட்டது. காலமறிதலாவது தமக்கும் பகைவர்க்கும் ஆகுங்காலம் ஆகாதகாலம் என இருவகையையுமறிதல். தமக்காகுங் காலமாவது பொருண்முதலிய குறையின்றி மகிழ்ச்சி மிகுந்திருக்குங்காலம். இடமறிதலாவது தமக்கும் பகைவர்கரும் வெல்லுதற்குத் தக்கவிடமுந் தகாதவிடமுமறிதல். வினையின் மூலமறிதலாவது வினைநிகழ்ச்சிக்கு இன்றியமையாத காரணமா யுள்ள கசரத துரக பதாதிகளுடைய வலியையும், ஏவல்செய் வோர், சேனைத்தலைவர் என்பவர்களுடைய வலியையும், உணவு, தண்ணீர்முதலிய வலியின் காரணங்களையுமறிதல். வினையின் மூலமறித்லென்பதற்கு வினையினது தொடக்கம் தக்கதோ தகாததோ எனவறிதலென்பாருமுளர். மேலும் சூழ்வனசூழ்த லாவது தொடங்குங்காரியத்திற்கு வருமிடையூறுகளையும் அவற் றினை நீக்குமுறையையும் வெல்லுமுறையையு மாலோசித்தறிதல்.

"வலியேகால மிடமிவற்றுன் மாற்றான் றனக்கு முனக்குமுள
பலவாநிலையும் வினைதொடங்கும் பண்புமதற்கா மிடையூறும்
விலகாததனை விலக்குவதும் வெல்லுமாறும் வென்றதனு
லுலவாப்பயனுமுதலனைத்துமோர்ந்துதெளிந்தேவினைசெய்க."

—விநாயகபுராணம்.

என்னும் செய்யுளானும் அறிக. (51)

கருமஞ்செய்யுங்கருத்தினர்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

இ-ள். கருமமே கண்ணயினர்-தம்மாலே தொடங்கப் பட்ட காரியத்தினையே முடிக்கவேண்டுமென்று கருதிக் கொண்டவர், மெய்வருத்தம் பாரார்-சரீரவருத்தத்தினையுங் கருதார், பசி நோக்கார் - பசியினையுங் கருதார், கண் துஞ்சார் - நித்திரையையுங் கருதார், எ எவர் தீமையும் பாரார் - எவரெவர்செய்யுந் தீங்குகளையும் பொருட்படுத்தி அவற்றிற்கு மாறுசெய்யக் கருதார், செவ்வி அருமையும் பாரார் - காலத்தின் அருமையையுங் கருதார், அவமதிப்பும் கொள்ளார் - பிறரவமதித்தலையுங் கருதார். எ - று.

செய்யத்தொடங்கிய காரியத்தினை முடித்துப் பயன்பெறக் கருதினவர் சரீரவருத்தமுதலியவைகளைப் பொருட்படுத்தி வினைக்கெடலாகாதென்பது கருத்து.

சரீரவருத்தம் பசி முதலியவைகளைக் கருதி அவை நீக்குதற்கு முயல்வாராயின்; தொடங்கிய காரியம் இடையூறெய்தி முடிவு பெறுதென்க. இலகுவிலே நீக்கத்தக்க தீங்கினையும் பொருட் படுத்தாரென்பது தோன்ற எவ்வெவர் தீமையுமென்றார். காலத்தினருமையாவது தங்காரியத்திற்கு ஒவ்வாது காலம் மாறுதல். கண்ணல் - கருதல். அது கண் என முதனிலை மாத்திரையாய் நின்றது. கண்ணயினர் என்பதற்குக் கண்ணுகக் கொண்டவர் என்பாருமுளர். (52)

சிறுபகையோம்பல்

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைப்பா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

இ - ள். பகை சிறிய எனினும் ஓம்புதல் தேற்றார் - பகைகள் சிறியனவாயினும் அவற்றினின்றும் விலகித் தம்மைக் காத்துக்கொள்ளுதலை அறியாதவர், பெரிதும்

பிழைப்பாடு உடையர் - அதிகமாகப் பிழையடைதலையுடையராவர், நிறை கயம் தாழ் நீர் மடுவில் - நிறைந்த நீரையுந் தாழ்ந்தன்மையையுமுடைய மடுவிலே, தவளை குதிப்பினும் யானைநிழல் காண்பு அரிது - தவளை குதித்தாலும் யானையின் நிழலைக் காணுதல் அரிதாகும். எ - று.

பகை சிறிதென்று அவமதித்தலாகாதென்பது கருத்து.

"பஞ்சியின் மெல்லிதேனும் பகை சிறிதென்ன வேண்டா - அஞ்சித்தற்காக்கவேண்டு மரும்பொருளாக வென்றான்" என்பது **சிந்தாமணி**.

தவளை குதித்தலால் நீர் கலங்குதல்பற்றிக் காண்பரிதென்றார். கயம் - நீர். "குளமுமாழமு நீருங்குறையுங் களிறும் பெருமையு மேன்மையுங் கயமெனல்" என்பது **பிங்கலம்**. தாழ்நீர்- கீழே ஆழ்ந்துபோகுந்தன்மை. (53)

உட்பகை

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப—அனைத்துலகும்
சொல்லின்றின் யாப்பார் பரிந்தோப்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.

இ - ள். புறப்பகை கோடியின் மிக்கு உறினும் அஞ்சார் - புறப்பகை கோடியென்னுந் தொகையினும் மிகப் பலவாகி வருமாயினும் அதற்குப் பயப்படமாட்டார், அகப் பகை ஒன்று அஞ்சி காப்ப - அகப்பகை ஒன்று தான் தனியேவரினும் அதனை அஞ்சி அஃதணுகாமல் அறிஞராயுள்ளோர் தம்மைக் காத்துக்கொள்வர், (அதற்குத் திருட்டாந்தம்) அனைத்துலகும் சொல் ஒன்றின் யாப்பார் - எல்லா உலகினையுந் தம்முடைய சொல்லொன்றினாலே கட்டிக் கொள்ளவல்ல முனிவர்தாமும், காமப்பகை பல்காலும்

ஓம்பி பரிந்து காப்ப - காமமாகிய உட்பகையினைப் பல முறையும் பேணி வருந்தியும் அணுகாது காத்துக் கொள்வர். எ - று.

சிறிதாயிருந்தாலும் அகப்பகையை அவசியங் களைதல் வேண்டுமென்பது கருத்து.

"எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு"

—வள்ளுவர்.

புறப்பகை புறத்திலே வெளியாய் நிற்கும்பகை. அகப்பகை உறவுபோலக் காட்டி உள்ளாய்நிற்கும்பகை. கட்டிக்கொள்ளல் - வசப்படுத்தல். பரிந்தும் என்புழி உம்மைதொக்கது. (54)

கூடாநட்பு

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்—கழிபெருங்
கண்ணேட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

இ - ள். புறம் நட்டு அகம் வேர்ப்பு ஆர் நச்சு பகைமை வெளியிட்டு - புறத்திலே நட்புச்செய்து உள்ளே புழுங்குதனிறைந்த நஞ்சுபோலும் பகையினுடைய தன்மையை வெளியாக்கி, வேறுதல் வேண்டும் - அதனேடொன்றுது தூரமாதல்வேண்டும், கழி பெரும் கண்ணேட்டம் செய்யேல் - (அவ்வாறுய பகையின்மேலே) மிகப் பெரிய கண்ணேட்டஞ் செய்யற்க, (அதற்குத் திருட்டாந்தம்) புண் கருவியிட்டு ஆற்றுவார் பொதிந்து வைத்து மூடார் - புண்ணினை ஆயுதங்களைப்புகுத்தி அறுத்துக் கீறித் தணியச் செய்வார்கள்; அதுவன்றி ஒன்றினுலே பொதிந்து மூடி வைக்கமாட்டார், எ - று.

களையாமல் அசட்டையாக விடப்பட்ட அகப்பகை வளர்ந்து மிகப் பெருந்தீங்குசெய்து தம்மைக்கெடுக்குமென்பது கருத்து.

கழிபெரும் என்னும் ஒருபொருட்பன்மொழி கண்ணோட்டத்தின் சிறப்புணர நின்றது. கண்ணோட்டம் - தாட்சிண்ணியம். தாட்சிண்ணியமாவது கண்ணுக்கு எதிர்ப்படுவோனுடைய விருப்பம் அநுகூலமாதற்குத் துணையாகச் செல்லும் பெருந்தகைமைக்குணம். பரிமேலழகர் கண்ணோட்டமாவது, "தன்னோடு பயின்றாரைக்கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர் கண் சென்றவழி நிகழ்வதாதலின், அப்பெயர்த்தாயிற்று" என்பர். கண்ணோட்டம் வாயிலாகப் பின்னும் உட்புகுதல்பற்றிக் கண்ணோட்டஞ்செய்யேல் என்றார். (55)

தீயநட்பு

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத்—திட்பமா
நாளுலந்த தன்றே நடுவ ணடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து.

இ - ள். நட்பிடை குய்யம் வைத்து - தமக்கு நண்பரிடத்திலே கபடஞ்செய்து, எய்யா வினை சூழ்ந்து - பிறராலறியப்படுதற்கரிய தீவினைகளைச் செய்யும்படியாலோசித்து, வட்கார் திறத்தராய் நின்றார்க்கு - (உள்ளே) பகைவர் பக்கத்தாராய் நின்றவர்களுக்கு, திட்பமா நாள் உலந்தது அன்றே - நிச்சயமாக நியமகாலமாகிய வாழ்நாள் முடிந்ததல்லவா, நடுவன் நடுவின்மை மறந்து வாளா கிடப்பன் - (அவருடம்பு விழாததென்னையெனின்;) நடுநின்று முடிவு செய்பவனாகிய இயமன் அவருயிரைப் பிரிக்கும் நீதிச்செயலைச் செய்யாமையாகிய நடுநிலையின்மை தன்கண் நிகழ்தலை மறந்து சும்மாகிடப்பன். எ - று.

உறவுபோலக்காட்டி உள்ளேநின்று பிறர்க்குத் தீங்குசெய்வோர் விரைந்து கெடுவரென்பது கருத்து.

மிகமறைவிற் செய்யப்படுவதாய்ப் பிறர்க்குப் புலப்படாமை பற்றி எய்யாவினை என்றார். எய்த்தல் - அறிதல்.

மனநலமுடையார்

மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே யாகும்—எனைத்துணையும்
தீயவே செயினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

இ - ள். கறுப்பு மனத்த எனின் நல்ல செயினும் - ஒருவன்மேலேகொண்ட சினக்குறிப்பு மனத்திற்கிடக்கு மாயின் அவன் தமக்கு நல்லனசெய்தாராயினும், அனைத்து எவையுந் தீயவே ஆகும் - அந்த நற்செயல்களெல்லாம் தீச்செயல்களாவே காணப்படும், மாசு இல் மனத்தினவர் - குற்றமில்லாத மனமுடையவர், எனைத்துணையும் தீயவே செயினும் நல்ல ஆ காண்ப - எவ்வளவோ அதிகமாகப் பிறர் தமக்குத் தீயனவற்றையே செய்தாராயினும் அவை யெல்லாம் நல்லனவாகக் காண்பர். எ - று.

பிறர்செய்த தீமையை மனத்திலே கினைத்திருத்தலாகா தென்பது கருத்து.

"நன்றல்லதன்றே மறப்பதுநன்று" எனவும், "மனத்துக்கண் மாசிலனாதலனைத்தறன்" எனவும் வள்ளுவருங் கூறுவர்.

மாசு: வெகுளி, வைரம், பொறாமை, அவா முதலியன. இவை மனத்திலே கிடக்குமாயின்; நன்மைதீமைகளை உள்ளவாறறிய விடாது மறைக்கும்.

"வாரம் பட்டுழி நல்லவுந் தீயவாந்
தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவாம்
ஒரும் வையகத் தியற்கையன் றேவென
வீரவே னெடுங் கண்ணி விளம்பினாள்."

—சிந்தாமணி.

கறுப்பு என்பதற்கு கறையெனப் பொருள்கொண்டு அழுக்கு மனத்திற்கிடக்குமாயின் என உரைத்தலும் பொருந்தும். (57)

இனியவருமின்னாரும்

**இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்.**

இ - ள். இனியவர் என் சொலினும் இன்சொல்லே - நற்குணநற்செயல்களையுடையவராகிய நல்லோர் யாது சொன்னாராயினும் (கடுஞ்சொற்கூறினுமென்றபடி) பின்னர் நன்மைபயத்தலால் இனிய சொல்லேயாகும், இன்னார் கனியும் மொழியும் கடுவே - தீயவருடைய கனிந்த சொல்லும் பின்னர்த் துன்பம் பயத்தலாற் கடுஞ்சொல்லேயாகும், (அதற்குத் திருட்டாந்தம்) அனல் கொளுந்தும் வெங்காரம் வெய்து எனினும் நோய் தீர்க்கும் - அனல்பற்றிய வெங்காரமானது முன்னர் வெம்மை கொடுப்பதாகக் காணப்படினும் நோயினை நீக்கிப் பின்னர்ச் சுகமாகிய குளிர்மையைச் செய்யும், சிங்கி மெய்பொடிப்ப குளிர்ந்தும் கொலும் - நஞ்சானது சரீரத்திலே புளகமுண்டாகுமாறு குளிர்ச்சி செய்து நின்றும் பின்னர் இன்னாவாகிய கொல்லுதலைச் செய்யும். எ - று.

பிற்பயனோக்காது நல்லோருடைய கடுஞ்சொல்லைவெறுத்தலுந் தீயோருடைய இன்சொல்லையுவத்தலுமாகாதென்பது கருத்து.

"மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க"

என்பது நன்னெறி. வெங்காரம் - ஒருவகையுப்பு. (58)

நல்வழி

**பொய்குறளை வன்சொற் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல்.**

இ - ள். சொல்லின் வழு பொய் குறளை வன்சொல் பயனில என்ற இந்நான்கும் எய்தாமை காத்து - சொற் குற்றமாகிய பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்று சொல்லப்பட்ட இவை நான்கும் வந்தடையாமற் பாதுகாத்து, மெய்யில் புலம் ஐந்தும் காத்து - சரீரத்தி லுள்ள ஐம்பொறிகளுக்குமுரிய புலன்கள் ஐந்தினையுந் தீயனவாகாமற் காத்து, மனமாசு அகற்றும் நலமன்றே நல்லாறு எனல் - மனவழுக்கினையும் நீக்குகின்ற நன்மை யல்லவா நன்னெறி எனச் சொல்லப்படுவது. எ - று.

மனம் வாக்கு காயமென்னும் மூன்றினாலுங் குற்றம் வாராது நடப்பதுவே நன்னெறியென்பது கருத்து.

குறளையாவது காணதவழிப் பிறரையிகழ்ந்துகூறுதல், உறவு செய்தறிந்த இரகசியங்களை வெறுப்புவந்துழிக் கூறுதல் முதலி யன. நீதியாகிய நயமின்மையாற் பயனில்சொல்லுங் குற்ற மாயிற்று. மனவழுக்காவன: வெகுளி, பொறாமை, பேராவா முதலியன. (59)

நல்வழியினிற்போர்

**நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.**

இ - ள். நல்லாறு ஒழுக்கின்றலை நின்றார் - நல்வழியிற் செல்லுதற்கண் நின்றவர்களாகிய பெரியோர், நல்கூர்ந்தும் அல்லன செய்தற்கு ஒருப்படார் - வறுமையுற்றாராயினும் பாவச்செயல்களைச் செய்தற்கு உடன்படமாட்டார், (அதற்குத் திருட்டாந்தம்) பல் பொறிய செங்கண் புலி யேறு - பல புள்ளிகளையும் செம்மையாகிய கண்களையு முடைய புலியேறானது, அற பசித்தும் பைங்கண் புனத்த பைங்கூழ் தின்னா - மிகப் பசியுற்றபோதும் பச்சைக் கொல்லையிலுள்ள பயிர்களைத் தின்னுதற்கு விரும்பமாட்டா. எ - று.

நல்லொழுக்கமுடையவர் வறுமைவந்துழித்தானும் பாவச் செயல்களைச் செய்தற்கு விரும்பாரென்பது கருத்து.

இங்கே நல்லாறென்றது மூற்கவியிற் சொல்லப்பட்ட நலத்தை.

"மெய்த்தி ருத்தவம் வீரம் படைக்கினு
மெத்தி றத்திட ரெய்திய தாயினு
முத்த மக்குல மேன்மை யொழுக்கமார்
தத்தநீதி பிழைப் பர்கொல் சால்புளோர்."

—சேதுபுராணம். (60)

கூடாதசெல்வம்

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவும்—தவம்விற்றாங்
கூனோம்பு வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉம்
தானோம்பிக் காத்த றலை.

இ - ள். குலம் விற்று கொள்ளும் வெறுக்கையும் - ஒருவன் தன் குலத்தினைவிற்றுப் பெற்றுக்கொள்ளுஞ் செல்வமும், வாய்மை நலம் விற்று கொள்ளும் திருவும் -

சத்தியமாகிய நன்மையைவிற்றுப் பெற்றுக்கொள்ளுஞ் செல்வமும், தவம் விற்று ஊன் ஓம்பும் வாழ்வும்-தவத்தினை விற்றுப் பெற்று உடம்பைக் காத்தற்குக் காரணமான செல்வமும், உரிமை விற்று உண்பதும் - உரிமையைவிற்றுப் பெற்று உண்ணப்படும் செல்வமும், தான் ஓம்பி காத்தல் தலை - தன்னை அணுகாது பேணிக் காத்துக்கொள்ளுதல் உத்தமச்செயலாம். எ - று.

ஒருவன் தன்னுடைய குலம் சத்தியம் தவம் உரிமை என்பவைகளைத் திரவியநிமித்தம் கைவிடலாகாதென்பது கருத்து.

குலம்விற்றலாவது:—குலத்திற்குரிய ஒழுக்கம் இன்சொல் பணிவு முதலிய செயல்களைத் திரவியநிமித்தம் கைவிடுதல். வாய்மைநலம்விற்றலாவது:—பொய்மொழிகூறல் பொய்ச்சான்று கூறல் முதலியவைகளைத் திரவியநிமித்தம் செய்தல். தவம்விற்றலாவது:—கூடாவொழுக்கம் தீமை களவுமுதலிய தவவொழுக்கத்திற்கேலாதவைகளைத் திரவியநிமித்தம் செய்தல். உரிமைவிற்றலாவது:—திரவியநிமித்தம் பிறனுக்கடிமையாகித் தன்வசமிழந்து நிற்றல். வாழ்வு – செல்வம். அது, வாழ்தற்குக் காரணமாதல் பற்றி வாழ்வெனப்பட்டது. "வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பி" என்னுஞ் சிந்தியாரினும் வாழ்வென்பது இப்பொருட்டாதலறிக. ஆங்கு - அசை. (61)

வஞ்சிப்போர்செல்வம்

இடைதெரிந் தச்சுறுத்தி வஞ்சித் தெளியார்
உடைமைகொண் டேமாப்பார் செல்வம்—மடநல்லார்
பொம்மன் முலைபோற் பருத்திடினு மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும்.

இ - ள். இடை தெரிந்து அச்சுறுத்து வஞ்சித்து - சமயத்தின் வாய்ப்பறிந்து பயமுறுத்தி வஞ்சகஞ்செய்து, எளியார் உடைமைகொண்டு ஏமாப்பார் செல்வம் - எளியவ

ருடைய பொருள்களை அபகரித்துக்கொண்டு தலையெடுப்புக் கொள்பவருடைய செல்வமானது, படம் கல்லார் பொம்மல் முலை போல் பருத்திடினும் - இளம்பெண்களுடைய பூரிப் படைகின்ற முலைபோலப் பருக்குமாயினும், அவர் நுண் இடைபோல் தேய்ந்துவிடும் - அவருடைய சிற்றிடை போலச் சிறிதாகத் தேய்ந்துபோகும். எ - று.

எளியாரை வருத்தி வஞ்சித்துக் கவர்ந்த திரவியம் வளர்வது போலக் காணப்படினும் விரைவில் அழிந்துவிடுமென்பது கருத்து. "களவினாலாகிய வாக்கமளவிறந்தா வதுபோலக் கெடும்" என்பது வள்ளுவர்.

தலையெடுப்புக்கொள்ளலாவது சொற்செயல்களிலும் உடை நடைகளிலும் யாரினும் மேலாகத் தம்மைக்காட்டுதல். ஏமாப்பா ரென்பதற்குக் களிப்பவர் என உரைப்பவருமுளர். (62)

பெற்றதைக்கைவிட்டுப்பெறாததைவிரும்பல்

பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா.

இ - ள். பெற்ற சிறுக - தன்னாற் பெறப்பட்ட பொருள்களெல்லாம் அற்பமென்று பேணிக்கொள்ளாமல் வரவர அனுபவிக்கப்பட்டு மிகச் சிறிதாகக் குறைய, பெறாத பெரிது உள்ளும் சிற்றுயிர்க்கு - பெறப்படாதனவாய பொருள்கள் (இனிவருவன) அதிகமென்றெண்ணி அதனைக் கருதியிருக்கும் அற்பவறிவுடைய உயிருக்கு, ஆக்கம் அரிது - மேன்மேலுயருந்தன்மை ஒருபோதும் உண்டா காது, (அதற்குத் திருட்டாந்தம்) வர வர வாய்மடுத்து - வருந்தோறும் தன்வாயினுள்ளடக்கி, வல் விராய் முற்றும்

மாய - வலிய விறகுகள் முழுமையும் அழிந்தொழிய, எரி தழல் மாயா திரா - எரிகின்ற அக்கினியும் அழிந்தொழியும், எ - று.

பெற்றது போதுமென்றமைந்து அதனைப் பேணிக்கொள்ளாது சிதறிவிட்டுப் பின்னர்ப் பெரும்பொருள் வருமென்று கருதியிருப்பவனுக்கு ஆக்கமில்லை என்பது கருத்து.

சிறக என்பது இது நிகழாநிற்க இது நிகழ்ந்ததென்னும் பொருட்டால் நிகழ்காலங் காட்டிநின்ற செயஎன்னும் வாய்பாட்டு வினையெச்சம். (63)

நீதிநெறியாற்பொருள்தேடல்

தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாளூன்றி—எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.

இ - ள். தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் - ஒவ்வொருவரும் தமது தமது நிலைக்கும் குடியினியல்புக்கும், தப்பாமே ஒத்த கடப்பாட்டில் தாள் ஊன்றி - ஏறுதல் குறைதலின்றி ஒப்பதான கடப்பாட்டின் கண்ணே அசைவின்றி நின்று, எய்த்தும் அறங்கடையிற் செல்லார் பிறன் பொருளும் வெஃகார் - விதிவசத்தால் அந்நிலை தளர்ந்தபோதும் பாவவழியிற் செல்லாராய்ப் பிறன்பொருளையும் விரும்பாதவருமாய் முயல்வாராயின், பொருள் புறங்கடையதாகும் - பொருளானது அவருடைய தலைவாயிலிலே தானேவந்து சேருமியல்புடையதாகும். எ - று.

தமது நிலைமைக்கும் குடிமைக்கும் இயைபத் தவிராது செயற்பாலனவற்றைச் சலியாது செய்து நல்வழியினின்று முயல்வார்க்குச் செல்வங் குறையாதென்பது கருத்து.

நிலையாவது:—தம்மிடத்தே நிற்றலுடையனவாகிய பொருள் வலி ஆண்மை துணை முதலியன. குடிமையாவது:—தமது குடியிலுள்ளாரால் ஆசரிக்கப்பட்டுவந்த இயல்புகள். கடப்பாடாவது:—தவிராது செயற்பாலனவாகிய கடமையாயுள்ளது. பரிமேலழகர் கடப்பாடு ஒப்புரவு என்றும், ஒப்புரவாவது உலகநடையினை அறிந்துசெய்தல் என்றும் கூறுவர். வேறுசிலர் உலகியல் என்றும் முறைஎன்றுங்கூறுவர். நிலைக்கொத்தகடப்பாடாவது:—தம்பாலுள்ள பொருள் ஆண்மை முதலிய நிலைக்கேற்பச் செயற்பாலனவற்றைச் செய்தல். குடிமைக்கொத்த கடப்பாடாவது:—தமது முன்னோர் நடந்த வரம்பிறவாது செயற்பாலனவற்றைச் செய்தல். தப்புதல்:—நிலைக்குங் குடிமைக்குமுரிய அளவினின்று பெருக்கமும் சுருக்கமுமாதல். (64)

உத்தமர்செல்வம்.

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே யனையோர் செல்வம்—கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயர்
செல்வம் பயன்படுவ தில்.

இ-ள். தலையாயார் செல்வம் பொதுமகள் நலம் போல்வ - உத்தமரிடத்துள்ள செல்வம் பொதுமகளிடத்துள்ள அழகினைப்போலப் பலர்க்கும் பயன்படுதலுடையதாகும், ஏனையோர் செல்வம் குலமகள் நலம் போல்வ - மத்திமரிடத்துள்ள செல்வம் கற்புடையாளிடத்துள்ள அழகினைப்போலத் தன்னையகற்கன்றிப் பிறர்க்குப் பயன்படுதலிலதாகும், கடையாயார் செல்வம் கலன் அழிந்த கைமை பெண்மை ஆர் நலம்போல் பயன்படுவது இல் - அதமரிடத்துள்ள செல்வம் மங்கலநாணிழந்த அமங்கலியின் பெண்டன்மை நிறைந்த அழகினைப்போல ஒருவர்க்கும் பயன்படுவதில்லை. எ-று.

தாமும் அனுபவித்துப் பிறர்க்குங் கொடுத்தலால் உத்தமரிடத்துள்ள செல்வமே சிறந்ததென்பது கருத்து.

மத்திமர் செல்வம் அவர்க்குமாத்திரமன்றிப் பிறர்க்குப் பயன்படாதென்பதும், அதமருடையசெல்வம் அவர்க்குத்தானும் பயன்படாதென்பதும் உபமான முகத்தாற் பெறப்படும். (65)

கொடையிலான்செல்வம்

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

இ - ள். வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் - உலோபியுடைய செல்வத்தினும், மற்றையோன் நல்குரவே நனி நல்ல - கொடையாளியுடைய வறுமையே மிகச்சிறந்ததாகும், (ஏனெனில்) அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று - இவன் அருளில்லாதவன் என்றும், அன்பில்லாதவனென்றும், கண்ணோட்டமில்லாதவனென்றும் பலவாறு சொல்லி, பலரால் கொன்னே இகழப்படான் - பலராலும் வீணாக இகழப்படமாட்டான். எ - று.

செல்வனுயிருந்துங் கொடுக்குங் குணமில்லாதவனை யாவருமிகழ்வரென்பது கருத்து.

வள்ளன்மை - கொடுக்குங் குணமுடைமை. போலும் - அசை. தான் பிறரை இகழானுகவும் பிறராலிகழப்படுதல்பற்றி கொன்னேயென்றார். கொடையில்லாதவன் அருளிலனன்பிலன் கண்ணறையனென்று இகழப்படுவான் என்பதை உட்கொண்டு அது புலப்படுமாறு கொடையாளி அங்ஙனமிகழப்படானெனக் கூறுதலால் இது மாறுபடுபுகழ்நிலை என்னுமணி. (66)

இன்சொற்கூறுதல்

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனுல் வாய்பூட் டிடப்படின்மற்
ருவா விவரென்செய் வார்.

இ - ள். ஈகை அரிதெனினும் - ஈயப்படும்பொருள் அரியதாய் இல்லையென்று சொல்லப்படுவதாயினும், இன் சொலினும் நல்கூர்தல் - எளிதிற் செய்யத்தக்கதாய் ஈதலி னும் மகிழ்வையுண்டாக்கவல்ல இன்சொற்கண்ணுமின்மை யடைதல், ஓகோ கொடிது கொடிது - ஓகோ கொடுமை! கொடுமை! நா கொன்று தீவினை கம்மியனுல் வாய் பூட்டிடப் படின் - சொல்லமுடியாமல் நாக்கினை உள்ளே அடக்கித் தீவினையாகிய கம்மியனுல் வாயாகிய கதவு அடைக்கப்படு மாயின், இவர் - கொடாதவழி இன்சொல்லையாவது சொல்லி மகிழ்விக்கவறியாதவர், ஆவா என்செய்வார் - ஐயையோ! யாதுதான் செய்வார். எ - று.

கொடுத்தல் கூடாதவழி அதனினும் நல்லதாய்த் தம்வயத்த தாய் வெளியேவிடினுங் குறைவுபடாததாயுள்ள இன்சொல்லைக் கூறுதுவிடுதல் மிக்ககொடுமை என்பது கருத்து.

ஓகோ முதலியன அதிசய இரக்கங்காட்டவந்தன. அருக்கி வைத்திருந்த இன்சொற்கொண்டு தமக்குவேண்டுஞ் சுகங்களையுஞ் சொல்லிச் செய்வித்துக்கொள்ள மாட்டாரென்பது தோன்ற என்செய்வாரென்ருர். மற்று - அசை. (67)

வாக்கினுற்செயுநன்மை

சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

இ-ள். சொல் வன்மை உண்டெனின் - ஒருவருக்குத் தமது சொல்லின்கண் பிறர்கேட்டமைந்து நடக்கத்தக்க கௌரவம் உளதாயின், கொன்னே விடுத்தொழிதல் - அவ்வாறுய சொற்கொண்டு செய்வன தவிர்வனவற்றைச் சொல்லிச் செய்வித்து நற்பயன்பெருமல் அச்சொற் பயனிலதாகப் போகவிட்டு விடுதல், நல்வினை கோறலின் வேறு அல்ல - புண்ணியச்செயல்களுக்குக் கேடுசெய்தலி னின்றும் வேருன செயலன்று, வாக்கின் பயன் கொள்பவர் - வாக்கினலே செய்யத்தக்க நல்வினைகளைச் செய்து அவற்ருற் பெறும்பயனுமுண்டென்பதனைக் கொள்பவர், தம் ஆக்கம் வல்லை கெடுவது உளதெனினும் - தமது சொற்கொண்டு நிகழுஞ் செயல்களுள்ளே தமது செல்வம் விரைந்து கெடுதற்குக்காரணமாகவருஞ்செயலுளதாயினும், அஞ்சுபவோ - அதனையஞ்சிப் பின்னிடுவாரோ பின்னிடமாட்டார். எ-று.

வாக்குநன்மையாற் பெறும்பயனையறிந்தவர் வாக்கினுற் செயப்படுவனவாகிய நன்மைகளைத் தவருது விரைந்து செய்வரென்பது கருத்து.

அதிகாரம், செல்வம், கல்வி, அறிவு, குலம் முதலியபற்றியல்லது வன்மையடைதல் சொல்லுக்கியல்பாக இல்லாமை பற்றி உண்டெனினென்ருர். சொல்லாற் செயப்படுந் தருமத்தினைச் செய்ய வன்மையிருந்துஞ் செய்யாதுவிடுதல் நல்வினையைக் கெடுத்தலால் வரும் பாவத்தினை அடைவிக்கும் என்பதுதோன்ற நல்வினைகோறலின் வேறல்லவென்ருர். வாக்கினுற் செயப்படும் புண்ணியங்களாவன:

"அறம்பெரி தறைதல் புறங்கூ ருமை
வாய்மை கல்வி தீமையிற் றிறம்பல்
இன்மொழி யிசைத்தல் வன்மொழி மறுத்தல்."

—சூளாமணி? ஞானமிர்தம்.

என கூறுவனவும் பிறவுமாம். நற்பயன் புண்ணியம், புகழ் முதலியன. (68)

சிறியமுயற்சியும்பெரியபயனும்

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார்—அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

இ - ள். எண்மையவாயினும் அறனல்ல கைவிட்டு - எளிதாகச்செய்து பெரும்பயன் பெறத்தக்கனவாய் வாய்க்குமாயினும் பாவத்தொடர்புடைய காரியங்களை முற்றும் விடுத்தொழிந்து, அரிதெனினும் ஒண்மையின் தீர்ந்து ஒழுகலார் - செய்தற்கரியதாயினும் நன்மையோடு சம்பந்தமுடைய காரியத்தை நன்மையினின்றும் விலகி யொழுகாது செய்து பயன்கொள்ளுஞ் சாதுரியர்கள், சிறு முயற்சி செய்து உறுபயன் கொள்ளப் பெறுமெனின் - அற்பகாரியஞ் செய்தலால் மிக்கபயன் கொள்ளப்பெறு மாயின், தாழ்வரோ தாழார் - அதனைச்செய்தற்குத் தாமதஞ்செய்வாரா ஒருகணமேனுந் தாமதமாய் நில்லாது விரைந்து செய்வார். எ - று.

அருஞ்செயல்களையுஞ் செய்து நன்மைபெறுஞ் சாதுரியர்கள் பெருநன்மை வருதற்குரிய அற்பகாரியத்தை மிக விரைந்து செய்வாரென்பது கருத்து.

சிறுமுயற்சி - முற்கவியிற்சொல்லப்பட்ட வாக்குவன்மையாற் செய்யத்தக்க நன்மைபோன்ற அற்பகாரியம். முயற்சி-முயலப் படுவதென்னும் பொருட்டாய் இங்கே காரியத்திற்காயிற்று. ஒண்மை - நன்மை. "அழகுநன்றுமறிவுமொண்மை" என்பது

பிங்கலம். வாயினென்பது முதனிலைத் தொழிற்பெயரடியாகவந்த வினையெச்சம். வாய்த்தல் - நேர்படுதல். (69)

நாகரிகமில்லாதவர்

செயக்கடவ வல்லனவுஞ் செய்தும னென்பார்
நயத்தகு நாகரிக மென்னுஞ்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

இ - ள். செயக்கடவவல்லனவும் செய்தும மன் என்பார் - (மேலே சொல்லப்பட்டனவாகிய எளிதிற் செய்து நலம்பெறற்குரிய காரியங்களைச் செய்யாது) தம்மாலே செய்து முடிக்கவியலாத காரியங்களையும் பெரிதுஞ் செய்வோமென்பவருடைய, நயத்தகும் நாகரிகம் என்னும் - விரும்பத்தக்க சாதுரியம் என்ன பயனுடையதாகும்! செயிர்த்து உரைப்பின் நெஞ்சு நோம் என்று - ஒருவரைக் கோபித்துக் கடிந்து கூறுவேனாயின்; அவர்மனம் வருந்துமென்று கூறுதுவிடுத்து, தலைதுமிப்பான் தண்ணளி போல் எஞ்சாது எடுத்துரைக்கற்பாற்று - பின்னர் அவருடைய தலையை வெட்டத் துணிபவனுடைய தண்ணிய கிருபை எடுத்திகழ்ந்து சொல்லப்படுதல்போல அவருடைய நாகரிகமும் பூரணமாக எடுத்திகழ்ந்து சொல்லப்படுந் தன்மையையுடையதாகும். எ - று.

இலகுவாகச் செய்து நலம்பெறுதற்குரிய காரியத்தைவிட்டு செய்துமுடிக்க இயலாதகாரியத்தைச் செய்வோமென்று துணிபவருடைய சாமர்த்தியம் இகழப்படுமென்பது கருத்து.

நாகரிகம் - நாகரிகர்செயல். நாகரிகர் - நகரசம்பந்தமுடையவர். நகரமாவது புண்ணியமானசெயலிலே வல்லவரைத்

தன்மாட்டுடையது; எனவே நாகரிகம் - செயற்பாலனவாகிய நற்செயலைச்செய்யும் வன்மையென்பது பெறப்படும். நாகரிகமென்பதற்குத் தாட்சிண்ணியமென்பாருமுளர். (70)

அடக்கமிலாதவர்

அல்லன செய்யினு மாகுலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப—அல்லால்
பிறர்பிறர் செய்பபோற் செயத்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரா.

இ - ள். ஒல்காதார் - அமைவில்லாதவர், அல்லன செய்யினும் ஆகுலம் கூழாக்கொண்டு வாய்விட்டு உலம்புப அல்லால் - செய்யத்தக்கனவல்லாத அருஞ்செயல்களையும் ஒரோவழிச் செய்தாராயினும் ஆரவாரத்தையே பயனாகக் கொண்டு வாய்திறந்து உளறுவார்களல்லாமல், பிறர்பிறர் செய்பபோல் செயத்தக்க செய்து - அமையுமியல்புடைய பிறரெல்லாஞ் செய்வதுபோலச் செய்யத்தக்கவைகளைச் செய்து, ஆங்கு அறிமடம் பூண்டு நிற்பாரா - அச்செயல்களிலே அறிமடம்பூண்டு நிற்கமாட்டார். எ - று.

அமைவில்லாதவர் செயற்கரியதொன்று செய்தாராயின் அதனை யாவர்க்குமெடுத்துச்சொல்லித் தொணிசெய்வரென்பது கருத்து.

ஆகுலமாவது பலராலுமறியப்பட்டுப் பேசுதல். ஆரவாரித்தன் மாத்திரமாகிய பயனுடைமையின் ஆகுலமென்றார். அறியும்படி இரைந்து பலமுறை கூறுதல்பற்றி வாய்விட்டுலம்புப என்றார். அறிமடம் - அறிந்தும் அறியார்போன்றிருத்தல். இங்கே அறிமடம்பூணலாவது: தான்செய்த அருஞ்செயலை ஒருவாற்றானுந் தன்னாற் பிறர்க்கு வெளிப்படுத்தாமலிருத்தல். பிறர் பிறர் செய்பபோல் என்பதற்குத் தாம்செய்வதுவாக வெளிப்படாமற் பிறர்செய்வதுபோலாக என்றுரைப்பாருமுளர்.

பழிகூறுவோன்

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக்கொல்வான்
கைவிதிர்த் தஞ்சப் படும். [போற்

இ - ள். பகையின்று பல்லார் பழியெடுத்து ஓதி - யாதொருபகையுமில்லாமற் பலரிடத்துமுள்ள வசைகளை எடுத்துப்பேசி, நகை ஒன்றே நன்பயனுக் கொள்வான் - இகழ்தலாகிய தீமையொன்றினையே நற்பயனென்று கொள்பவன், பயமின்று மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறு உடைத்து கொல்வான்போல் - வேறொருபயனுமின்றிச் சரீரத்திலே நடுக்கமாகிய பயனொன்றைக் காணக்கருதி பிறனொருவனுடைய கதுப்பினையடித்துடைத்தும் வருத்து பவன் பிறராற்கண்டுழி அஞ்சப்படுதல்போல, கைவிதிர்த்து அஞ்சப்படும் - கைதெறித்து அஞ்சப்படுவான். எ - று.

காரணமின்றிப் பிறர்வசை பேசுவோனைக் கண்டமாத்திரத் திற்றானே யாவரும் பேசாமலஞ்சி ஓடுவரென்பது கருத்து.

இன்றியென்பன இன்றெனத் திரிந்தன. கைவிதிர்ப்பு - கைக்கொடித்தல். இங்கே இவனோடு நின்று பேசுதலாகா தென்பதைக் குறிப்பா லுணர்த்திற்று. கொல்வான் எழுவாய். அஞ்சப்படுதலாவது தன்னைக்கண்டுழிப் பிறரெல்லாம் பேசா மலஞ்சியோடுதற்குக் காரணனாதல். (72)

ஆத்திகருநாத்திகரும்

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றுறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வர் பயன்.

இ-ள். தெய்வம் உளது என்பார் - தெய்வமுண்டென்றுகருதி விசுவசிப்பவர்கள், தீய செயப் புகின் - தீயசெயல்களைச் செய்யத்தொடாங்குவாராயின், தெய்வமே கண் நின்று நின்று ஒறுக்கும் - தெய்வந்தானே அவரெதிரில் ஆங்காங்குநின்று அத்தீயசெயல்களிற் செல்லவிடாமல் அவரைக்கண்டிக்கும், தெய்வம் இலது என்பார்க்கு இல்லை - தெய்வமென்பது இல்பொருளென்றுசொல்லி விசுவசியாதவருக்குத் தெய்வம் முன்னர்நின்று தீயவழியைவிலக்கி நல்வழியில் விடுத்தலில்லை, (அதற்குத் திருட்டாந்தம்) தம் இன் புதல்வர்க்கு அன்றேபயன் பல்காலும் சொல்வர் - பிதாமார் தம்முடைய இனிய புத்திரர்களுக்கல்லவா தீயவழியிற்செல்லாமற் பயனுடைய கட்டுரைகளைப் பலமுறையுஞ் சொல்வார். எ - று.

தெய்வமுண்டென்று விசுவசிப்போர் ஒரோவழித் தீங்கு செய்யப்புகினுந் தெய்வம் விடாதென்பது கருத்து.

தெய்வமுளதென்பவர் தீயனசெய்யாரென்பது தோன்றச் செய்யப்புகின் எனவும், இலதென்பார்க்கு முன்வாராமை தோன்றக் கண்ணின்று எனவுங் கூறினார். கண்ணின்றென்பதற்குத் தாட்சிண்ணியமின்றியென் றுரைப்பாருமுளர். அது, தெய்வ குணமன்மையானும், திருட்டாந்தத்துள்ள பலகாலும் என்பதற்கு மாறுபடுதலானும் பொருந்தாதென்க. (78)

தீவினையாளர்செல்வம்

தீய செயற்செய்வா ராக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல்.

இ - ள். தீயசெயல் செய்வார் ஆக்கம் பெருகினும் - தீயனவாகிய செயல்களைச் செய்பவருடைய செல்வமானது பெருகிச் சிறிதின்பங்கொடுப்பினும், தீயன தீயனவே வேறு அல்ல - நெருப்பின்கணுள்ளதாகிய தீமையையுடையனவேயாம்; அதனின் வேறுதலுளதேனுஞ் சேர்ந்தாரைக் கொல்லுதலால் வேறுவனவல்ல, தீயன நல்லன வாகா - தீச்சம்பந்தமுடையன நன்மைபயப்பனவாகா, கவயமா நா இன்புற நக்கி கொல்லும் - காட்டுப்பசுவானது முன்னர் நாக்கினாலே இன்பமுறுமாறு நக்கிப் பின்னர்த் துன்பமுறுமாறு கொன்றுவிடும். எ - று.

தீயவழியால் வந்த செல்வஞ் சிறிதுவளருமாயினும் மிகப் பெருந்துன்பஞ் செய்வதாகும் என்பது கருத்து.

தீ தான்பற்றிய இடத்தை முற்றத் தகித்தல்போலத் தீமையாலே தேடப்பட்டபொருளுந் தற்சேர்ந்தாரை முற்ற அழித்தல் பற்றித் தீயனதீயன என்றார். போல் - அசை. (74)

பழிநாணுவோர்

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயுஞ்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர்—முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடையவார்
தீய செயினுஞ் சில.

இ - ள். சில தீய செயினும் - அபுத்திபூர்வகத்தாலாவது பிறகாரணத்தாலாவது தாம் ஒரோவழிச் சில தீய செயல்களைச் செய்தாராயினும், தம் முன்னை ஊழ்வலி உன்னி பழிநாணி உள்ளுடைவார் - தம்முடைய பழைய ஊழின்வலியை நினைத்துப் பழிக்கு நாணி என் செய்தேமென்று மனநிலைகுலைபவர்கள், நன்மக்கள் செம் நா தழும்பு இருக்க - பெரியோருடைய செம்மையாகிய நாக்கிலே

(அடிக்கடி தமது நன்மையை எடுத்துரைத்தலால்) தழும் பேறியிருக்கும்படி, நாள் வாயும் செம் நெறி செல்வாரின் கீழல்லர் - நாடோறும் வாய்க்கின்ற நல்வழியிலே ஒழுகு வாரினின்றுஞ் சிறியவராகார். எ - று.

அறிஞராயுள்ளோர் அபுத்திபூர்வமாகச் சில தீங்கு செய்யி னும் அதனால் அவமதிக்கப்படாரென்பது கருத்து.

சத்தியமாகிய செம்மையுடைமையாற் பெரியோர் நா செந்நா வெனப்பட்டது. ஊழ்வலியுன்னலாவது ஊழினதுவலியாலே செயப்பட்டதென்று கருதுதல். (75)

பிறன்மனைவியைவிரும்புதல்

> **பிறன்வரை நின்றாள் கடைத்தலை சேறல்**
> **அறனன்றே யாயினு மாக—சிறுவரையும்**
> **நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே**
> **மெய்ந்நடுங்க வுண்ணடுங்கு நோய்.**

இ - ள். பிறன் வரை நின்றாள் கடைத்தலை சேறல் - பிறனுடைய எல்லைக்குள்ளே நின்றவளுடைய வாயிலின் கண்ணே சென்று நிற்றல், அறனன்றே ஆயினும் ஆக - பாவமேயாயினுமாக, சிறுவரை நல் நலத்தது ஆயினும் கொள்க - அங்கே பெறுவது ஒருகணப்பொழுதாவது அநுபவிக்கத்தக்க நற்சுகமுடையதாயின் அதனைக் கொள்ளுக, நலம் அன்றே - நலந்தருவதன்று, மெய் நடுங்க உள் நடுங்கும் நோய் - சரீரம் நடுங்க மனமும் நடுங்குதற்குக் காரணமான வருத்தந்தருவதேயாம். எ - று.

பிறன்மனையாளைப் புணர்தல் பாவமாய்ப் பின்னர்த் துன்பம் பயத்தலன்றி அப்பொழுதும் பெறக்கருதிய இன்பத்திற்கு மாறாய்த் துன்பம்பயத்தலாற் சிறிதுமாகாதென்பது கருத்து.

பிறன்மனையாளைப் புணர்தலென்பது இழிவுபற்றி பிறன் வரைநின்றாள் கடைத்தலைசேறல் என வேறோராற்றாற் கூறப்

பட்டது. அது நோயாதலைப் "புக்கவிடத்தச்சம் போதரும்போ தச்சம் துய்க்குமிடத்தச்சம் தோன்றாமற் காப்பச்சம்" "காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையும்" என்னும் நாலடியார் கவிகளானுணர்க. (76)

நல்லின்பம்

கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வு படாமே—பெரிதுந்தம்
இன்னலமுங் குன்றாமே யேரிளங் கொம்பன்னார்
நன்னலந் துய்த்த னலம்.

இ - ள். கருமம் சிதையாமே - தம்மாற் செயற்பாலனவாகிய காரியமுந் தவறிப்போகாமல், கல்வி கெடாமே-கற்றுக்கொண்ட கல்வியுங் கேடுறாமல், தருமமும் தாழ்வு படாமே - செய்துவருந் தருமமும் தாழ்ச்சியடையாமல், தம் இன்னலமுங் குன்றாமே - தம்முடைய இல்லற நன்மையுங் குறைவுபடாமல், ஏர் இளங் கொம்பு அன்னார் நல் நலம் துய்த்தல் நலம் - அழகிய இளங்கொம்பினை ஒத்த தம் மனைவியராற் கொடுக்கப்படும் நல்லின்பத்தை அநுபவித்தல் ஒருவருக்கு நன்மையாகும். எ - று.

கருமம் முதலியன தவறாது தம்மனைவியோடு கூடியின்பமனுபவித்தலே நன்மையென்பது கருத்து.

கருமம் முதலியன சிதையுமாயின்; அவ்வின்பமுஞ் சிதைந்து துன்பமாய் முடியும். பகை பாவம் அச்சம் பழி என்பனவின்மை பற்றி நன்னலமென்றார். (77)

காமசிந்தையுடையவர்

கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்யார்—பழியோடு
பாவ மிஃதென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார்.

இ - ள். காமம் கதுவப் பட்டார் - காமத்தினலே இறுகப் பற்றப்பட்டவர், கொலை அஞ்சார் - கொலை செய்தற்கும் அஞ்சமாட்டார், பொய் நாணர் - பொய்சொல்லுதற்கும் நாணமாட்டார், மானமும் ஓம்பார் - தம்முடைய மானத்தையும் பேணர், களவு ஒன்ருே ஏனையவும் செய்வார் - களவுமாத்திரமோ மற்றைய பாதகச்செயல்களையுஞ் செய்வார், இஃது பழியொடு பாவம் என்னர் - இது பழி பாவங்களைப் பயப்பதொன்றென்பதையும் கருதார்!, பிறிது மற்று என் செய்யார் - இவற்றின் வேருயுள்ள எத்தீங்குகளைத்தான் செய்யமாட்டார்? எ - று.

காமசிந்தையுடையவர் எல்லாத்தீங்குகளுஞ் செய்வரென்பது கருத்து. (78)

தூர்த்தர்

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர்—நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னுந்
தீய விலங்கிற் சிலர்.

இ - ள். சிலர் மனைக்கிழத்தி திருவினும் நல்லாளேனும் - சிலர் தம்மனையாட்டி இலக்குமியினுஞ் சிறந்தவளாயினும் அவளைவிட்டு, பிறர் மனைக்கே பீடு அழிந்து - பிறன்மனையாளை விரும்பித் தம்முடைய மானமழிந்து, நறுவிய வாயினவேனும் உமிழ்ந்து கடுதின்னும் தீய விலங்கின் நிற்பர் - இனிய பொருள்கள் வாயின் கண்ணகப்பட்டன வாயினும் அவற்றைக் கக்கிவிட்டுக் கார்ப்புள்ள பொருள் தேடித் தின்கின்ற தீய மிருகம்போல அறிவில்லாதவராய் நிற்பார். எ - று.

மனைவியைவிட்டுப் பிறர்மனையாளை விரும்பிச் செல்வோர் கரும்பினைவிட்டு வேம்பினை விரும்புவார்போன்ற பெருமூடரென்பது கருத்து.

ஒட்டகம் இனிய பதார்த்தங்களைவிட்டு வேம்பு முதலிய கசப்புள்ள பொருள்களைத் தேடி உண்ணுமென்பர்.

"தள்ளரும்பரந்தாக்கியவொட்டகம்
தெள்ளுதண்கரும்பியாவையுந்தின்கில
உள்ளமென்னத்தம்வாயுமுலர்ந்தன
கள்ளுண்பார்களிற்கைப்பனதேடியே."

—இராமாயணம். (79)

வாழ்க்கைத்துணைநலம்

கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு.

இ-ள். கற்பு உடுத்து - கற்பினையே உடையாக உடுத்து, அன்பு முடித்து - அன்பினையே மலராகச் சூடி, நாண் மெய் பூசி - நாணினையே கலவைச்சாந்தாகச் சரீரத்திற் பூசி, நற்குணம் நற்செய்கை பூண்டாட்கு - நற்குண நற்செய்கைகளையே ஆபரணங்களாக அணிந்துகொண்ட மனையாட்டிக்கு, மக்கட்பேறு என்பதோர் செல்வமும் உண்டாயின் - நன்மக்களைப் பெறுதலென்று சொல்லப் படுஞ் செல்வமுமுளதாயின், கொண்டாற்கு செய்தவம் வேறு இல்லன்றே - நாயகனுக்குச் செய்யப்படுந் தவம் வேறில்லையேயாம். எ - று.

கற்பு அன்பு நாண் முதலியவைகளை யுறுதியாகக் கொண்ட நாயகியாலே நாயகனுக்கு எல்லாத்தவமுமமையுமென்பது கருத்து.

"இல்லதெனில்லவண்மாண்பானல்" என்பது **வள்ளுவர்.**

கற்பாவது கணவனே தெய்வமெனக்கருதியிருப்பதோர் கொள்கை. நாணுவது செய்யத்தகாதனவற்றிலே உளத்திற்கு வருவதோர் ஒடுக்கம். (80)

மகளிர்மனம்

ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம்.

இ-ள். ஏந்து எழில் மிக்கான் - எவராலுங் கொள்ளப்படும் அழகிற் சிறந்தவனும், இளையான் - இளம்பருவமுடையவனுமாய், இசைவல்லான் - இசைபாடுதலில் வன்மையுடையவனுமாய், காந்தையர் கண்கவர் நோக்கத்தான் - பெண்களுடைய கண்களையெல்லாங் கவரும் பார்வையுடையனுமாய், வாய்ந்த நயனுடை இன்சொல்லான் கேளெனினும் - சிறந்த நீதியையுடைய இன்சொற்களைப் பேசுபவனுமாய் வாய்ந்த ஓராடவன் தமக்கு நாயகனுகவுள னென்றாலும், மாதர்க்கு மனம் அயலார் மேலாகும்-பெண்களுக்கு மனம் அவனைவிட்டு அயலவர்மேற் செல்லும். எ - று.

நாயகன் ஐம்பொறிகளானும் அநுபவிக்கத்தக்க சுகாநுபவங்களெல்லாமுடையவனுயினும் அவனைவிட்டு அயலாரை விரும்புதல் பெண்களுக்கு இயற்கையென்பது கருத்து.

பெண்களுக்குக் கற்பும் மனமும் நண்பும் நிலைகுலைதல் இயற்கை என்பது மநுமிருதி. இசைபாடுதலும் பெண்களை மயக்கி வசமாக்கும்; "பாடினுன்றேவகீதம் பண்ணினுக்காசான் பாடச்சூடகமகளிர்சோர்ந்து" என்பது **சிந்தாமணி.** (81)

கற்பில்லாமனைவி

கற்பின் மகளி னலம்விற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லர்—மற்றுத்தம்
கேள்வர்க்கு மேதிலர்க்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார்.

இ - ள். நலம் விற்று உணவுகொள்ளும் பொற்றொடி நல்லார் - தம்முடைய இன்பம்விற்றுச் சீவனஞ்செய்யும் பரத்தையர்கள், கற்பு இல் மகளின் நனி நல்லார் - கற்பில்லாத மனையாட்டியினும் மிக நல்லவராவர், (ஏனெனில்) தம் கேள்வர்க்கும் ஏதிலர்க்கும் தங்கட்கும் தங்கிளைஞர் யாவர்க்கும் கேடு சூழார் - தம்மேலன்புடைய நாயகருக்கும், பிறருக்கும், தமக்கும், தமதுறவினர் சகலருக்குங் கேடு செய்ய நினையார். எ - று.

கற்பில்லா மனைவியினும் பொதுமகளிர் நல்லவரென்பது கருத்து.

பொற்றொடி - பொன்னாலாகிய வளையல். கேள்வர்க்குக் கேடுசூழ்தலாவது அபசாரியாய் அவர் புகழையும் புண்ணியத்தையுங் கெடுத்தல். ஏதிலர்க்குக் கேடுசூழ்தலாவது அவரையும் புணர்ந்து பகை பாவம் பழி என்பனவுடையராக்குதல். கிளைஞர்க்கு கேடுசூழ்தலாவது அவரையும் பழி முதலியவைகட்கு ஆளாக்குதல்.

"பொருவில்கற்பின்வழீஇயமங்கையர்
உரியமூன்று மரபிலுள்ளோரையும்
வெருவந்தேங்கிவிழுங்கியுமிழ்கலா
வெரியுந்நிரயத்திற்குடியேற்றுவார்." —**காசிகாண்டம்.** (82)

கற்பிலாமகளிர்பிறப்பு

முறையுங் குடிமையும் பான்மையு நோக்கார்
நிறையு நெடுநாணும் பேணார்—பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவம்
கற்பின் மகளிர் பிறப்பு.

இ - ள். முறையும் குடிமையும் பான்மையும் நோக்கார் - முறைமையையும் தங்குடிப் பெருமையையும் பான்மையையுங் கருதார், நிறையும் நெடுநாணும் பேணார் - நிறையினையும் மிக்க நாணினையும் பேணிக்கொள்ளார், பிறிதும் ஒரு பெற்றிமையும் பேதைமைக்கு உண்டே - இக்குணங்களன்றி வேறும் ஒருகுணம் பேதைமையுடையாரிடத்துண்டோ? இல்லை, கற்பு இல் மகளிர் பிறப்பு பெரும் பாவம் - (ஆதலாற்) கற்பில்லாத பெண்களின் பிறவி பெரும்பாவமுடையதாகும். எ - று.

கற்பிலாமகளிர் பெரும் பாவமுடையவரென்பது கருத்து.

முறைநோக்கலாவது இவர் நமக்கு இன்னமுறையினரெனக் கருதல். பான்மை ஒருவனுக்கேயுரிமையாய் நிற்றல். நிறையாவது கற்புநெறியிலே மனத்தினை நிறுத்தல். (83)

துறவிகள் பெண்களை வெறுத்தல்

பெண்மை வியவார் பெயரு மெடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார்—பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார்.

இ - ள். வீடு இல் புலப்பகையினார் - கெடுதலில்லாத புலன்களை வென்றவர், பெண்மை வியவார் - பெண்களுக்குரிய தன்மைகளை நன்குமதியார், பெயரும் எடுத்தோதார் - பெண்களென்னும் பெயரைத்தானும் எடுத்துச் சொல்லார், கண்ணொடு நெஞ்சு உறைப்ப நோக்குறார் - கண்களோடு மனஞ் சென்றழுந்துமாறு பாரார், பண்ணொடு பாடல் செவிமடார் - பண்ணோடு பாடலையுங் கேளார், பண்பல்ல பாராட்டார் - பண்பல்லனவாய மற்றைக் குணஞ் செயல் முதலியவைகளையுங் கொண்டாடமாட்டார். எ - று.

ஐம்புலன்களுக்குமுரிய ஆசைகளை முற்ற விடுத்த முனிவர்கள் சிற்றின்பத்திற்குக் காரணமான விடயங்களிற் சிறிதுந் தொடர்ச்சியுறார் என்பது கருத்து.

பெண்மை என்றது பெண்களுடைய அழகு, குணம் முதலியவைகளை. செவிமடுத்தல் - கேட்டல். பண்பல்ல - நற்குணங்களல்லாதன. (84)

துறவிகளுண்டி

துயிற்சுவையுந் தூநல்லார் தோட்சுவையு மெல்லாம்
அயிற்சுவையி னாகுவவென் றெண்ணி—அயிற்சுவையும்
பித்துணாக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போன்
மொத்துணா மொய்ம்பி னவர்.

இ - ள். பிறர் சிலர் போல் மொத்துணா மொய்ம்பினவர் - வேறு சிலர்போல ஐம்பொறிக்குரிய அவாவினாலே அடிபடாத மனவலியுடைய தபோதனர், துயிற்சுவையும் தூநல்லார் தோட்சுவையும் எல்லாம் - நித்திரையாலாகுமின்பமும் குற்றமில்லாத பெண்களுடைய தோளைச்சேருதலாகிய இன்பமும் மற்றைய எல்லாவின்பமும், அயிற்சுவையின் ஆகுவ என்றெண்ணி - உண்டியினாலுண்டாகுமியல்புடையன என்று கருதி, அயிற்சுவையும் பித்து உணாக் கொள்ப போல் கொள்ப - உண்டியையும் பைத்தியமுடையோன் உண்பதுபோல நியமமின்றி நேர்ந்துழி அற்பமாக உண்பார். எ - று.

தபோதனர்கள் சிற்றின்ப விஷயத்திற்குக் காரணமாகுமென்று உண்டியையுஞ் சுருக்குவார்களென்பது கருத்து.

அயிற்சுவை அயிலப்படுதலையுடைய சுவைப்பொருள்; எனவே உண்டி யென்றவாறாம். பிறர்சிலரென்றது இலௌகிக விஷயங்களிலே அழுந்தியிருப்பவரை. (85)

துறவிகளுடம்புபேணுமை

அன்போ டருளுடைய ரேனு முயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார்—புன்புலாற்
பொய்க்குடி வோம்புவரோ போதத்தாற் றாம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார்.

இ - ள். அன்போடு அருளுடையரேனும் - அன்பும் அருளுமுடையராயினும், உயிர்நிலை என்பு இயக்கம் கண்டும் புறந்தரார் - உடம்பிலே எலும்பு புறப்படுதலைக்கண்டும் அதனைக்காக்க நினையார், போதத்தால் தாம்வேய்ந்த புக்கில் குடிபுகுதுவார் - ஞானங்கொண்டு தம்மால் வேயப்பட்ட மோட்சவீட்டிலே குடிபுகுதற்கு ஆயத்தமாக இருப்பவர், புன்புலால் பொய்க்குடில் ஓம்புவரோ - இழிந்த தசைகளால் வேயப்பட்ட உடம்பாகிய பொய்க்குடிலைப் பேணுவாரோ பேணமாட்டார். எ - று.

பேரின்பவீடாகிய மோட்சத்திற் செல்லுதற்கிருப்போர் சிற்றின்பவீடாகிய உடம்பைப் பேணார் என்பது கருத்து. (86)

துறவிகள் சிற்றின்பம் விரும்பாமை.

சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப—முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும் பியில்.

இ - ள். சிற்றின்பம் சில் நீரது ஆயினும் - சிற்றின்பம் சிறுமையுடையதாயினும், அஃது உற்றார் மற்று இன்பம் யாவையும் கைவிடுப - அதனுள்ளே முழுகினவர் மற்றை இன்பங்களெல்லாவற்றையும் கைவிடுவார், பேரின்பம் மா கடல் தாம் முற்றும் ஆடுவார் - பேரின்பமாகிய பெருங்கட

விலே தாம் முழுவதும் முழுகும் விருப்புடையவர், பார் இன்பம் பாழ் கும்பியில் வீழ்பவோ - இவ்வுலகவின்பமாகிய அழுகற்சேற்றுநீரிலே விழுந்து முழுகார். எ - று.

பேரின்பத்தை விரும்புவோர் சிற்றின்பத்தை முற்றும் வெறுப்பரென்பது கருத்து.

கும்பி - சேறு. "யானையுகரகமுஞ்சேறுங்கும்பி" என்பது பிங்கலம். (87)

துறவிகளாலவசியம் விலக்கப்படுவது

எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனிற்
றெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்—அவ்வினை
காத்த லிலரே லெனைத்துணைய ராயினுந்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர்.

இ - ள். எவ்வினையரேனும் இணைவிழைச்சு ஒன்று இல்லெனின் - துறவோர் தமது துறவுக்கு விலக்கப்பட்ட கோபித்தல், பிறரை நிந்தித்தல், ஓரிடத்திருத்தல், முதலிய செயல்களுள் எவைகளைத் தானுடையவராயினும் மகளிர் புணர்ச்சியாகிய ஒருதொழின்மாத்திரம் செய்யாராயின்; தெவ்வும் திசைநோக்கி கைதொழூஉம் - அவர் பகைவன் தானும் அவரிருக்குந் திசைநோக்கி அஞ்சலிசெய்வன், அவினைகாத்தல் இலரேல் - அச்செயல் தம்மிடம் நிகழாது காத்துக்கொள்ளாராயின், எனைத்துணையராயினும் - விதிக்கப்பட்ட தொழில்களெல்லாஞ்செய்து எத்துணையுஞ் சிறந்தவராயிருப்பினும், தூர்த்தரும் அலர் தூர்ப்பார் - மகளிர்புணர்ச்சியைச் சிறிதும் தவிராத காமுகர்தாமும் அவர்மேற் பழிமொழிகளை அதிகமாகச் சொல்வார். எ-று.

எத்துணைச்சிறப்புடையராயினுங் காமப்பற்றுடையவர் துறவியென மதிக்கப்படாரென்பது கருத்து.

"ஏந்திழையார் தஞ்சயாத் தெய்தித்தம் மெய்தொடினுங் காய்ந்து வர்த்தலே துறவுகாண்" என்றார் பிறரும்.

துறவிகளுக்கு விதிக்கப்பட்ட செயல்களாவன:— கோபமின்மை, கிக்தையின்மை, பிச்சைவாங்குதல் முதலியன. இணைவிழைச்சு - புணர்ச்சி; பெண் ஆண் என்னும் இரண்டும் விரும்பிச் செய்யப்படுதலால் இணைவிழைச்செனப்பட்டது. (88)

பேதைமையுடையார்செயல்

பரபரப்பி னோடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப—ஒருவாற்றால்
நல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றா னுய்வ ரிவர்.

இ - ள். பரபரப்பினோடே பலபல இரவுபகல் செய்து - (சிலர்) சம்பிரமத்தோடே மிகப்பல காரியங்களையெல்லாம் இரவும்பகலுமாகச் செய்து முடித்து, ஆங்கு பாழுக்கு இறைப்ப - அங்கே பெற்றுக்கொண்ட பொருள்களை ஒருபிரயோசனமுமில்லாத சிற்றின்பவிஷயங்களிலே அள்ளி வீசுவார்கள், ஒரு ஆற்றான் நல்லாற்றின் நூக்கின் பதறி குலைகுலைப - அவர் ஒருவழியினாலே திருப்பி நல்வழியிலே செலுத்தப்படினும் அதனைவிட்டு யாம் எங்கே வந்தோமென்று பதறி மனங்குலைவர், இவர் எவ்வாற்றான் உய்வர் - இவ்வியல்புடையவர் எவ்வழியாலுய்தி பெறுவார்? எ - று.

அரிதிற்பெற்ற செல்வங்களைச் சிற்றின்பவிஷயங்களிலே முற்றும் விடுபவர் ஒருகாலுமுய்யமாட்டாரென்பது கருத்து.

சம்பிரமம் - செய்ய விரும்பிய காரியத்திலே மனத்துக்குத் தோன்றும் விரைவு. அறிவின்மையாலே நல்வழியினிலைத்திலர். "வேறுகொள் புலனைவென்றோர் மேலைநன் னெறியுய்த்தாலுந் தேறியவுணர்விலாதோர் செல்வழிச்செல்வரன்றே" என்பது கந்தபுராணம். (89)

தவம்

இளைய முதுதவ மாற்றுது நோற்றென்
றுளைவின்று கண்பாடு மூழே—விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாரும்
தாழாமே நோற்பர் தவம்.

இ-ள். வாழ் நாள் வரம்புடைமை விளிவு இன்று காண்பரேல் - (ஒருவர் தாம்) வாழ்கின்ற நாள் இவ்வளவென எல்லையுடைத்தாயிருக்குந் தன்மையைக் கேடின்றி அறிவாராயின்; இளையம் நோற்றுமுது தவம் ஆற்றுதும் என்று - யாம் இப்போது இளமைப்பருவமுடையேம் வருந்துன்பங்களையெல்லாம் பொறுத்து முதுமைப் பருவத்திலேதானே தவஞ் செய்துகொள்ளுவேம் என்று கருதி, உளைவு இன்று கண்பாடும் ஊழே - தவஞ்செய்து வருந்தாது தூங்கிக்கிடத்தலும் அவர்க்கு முறையேயாம், காண்பாரும் தாழாமே தவம் நோற்பார் - வாழ்நாள் வரம்புடைமையைக் காணவல்ல முனிவர்தாமும் தாமதமின்றித் தவஞ்செய்வார். எ - று.

இறக்குநாளிதுவென அறியப்படாமையின் விரைந்து தவஞ் செய்யவேண்டும் என்பது கருத்து. (90)

துர்விதி

நல்லவை செய்யத் தொடங்கினு நோனுமே
அல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கும்—எல்லி
வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல்.

இ-ள். எல்லி ஆறலைத்து உண்பார் - இராக்காலத்திலே வழிப்பறித்துண்பவர்களாகிய மறவர்கள், வியல்

நெறி செல்வாரை செலவுபிழைத்து உய்ப்ப போல் - சனப் போக்குவரவுடைய பெருவழியிற்செல்பவரை அவ்வழியினின்றும் விலகச்செய்து சனப்போக்குவரவில்லாத அருவழியிற் கொண்டுசெல்லுதல்போல, அல்லன - தீயூழானது, நோனுமே நல்லவை செய்ய தொடங்கினும் அல்லவற்றிற் கொண்டுய்க்கும் - ஒருவர் தவஞ்செய்யாது நற்செயல்களைச் செய்யத்தொடங்குவாராயினும் அவரைத் தீச்செயல்களிலே கொண்டுபோய்விடும். எ - று.

தவஞ்செய்யாதவர் நல்வழிச்செல்லினும் ஊழ்வினை விடாதென்பது கருத்து.

செலவு - வழி. மனம் பொறிவழி போகாது நிற்றற்குக் காரணமாகிய தவஞ்செய்யாதவர் பொறிவழியே மனத்தை விடுதலால் தாம் செல்லத்தொடங்கிய நல்வழியையும் விடுத்து ஊழின்வசத்தராவர். (91)

கூடாவொழுக்கம்

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே—கஞ்சுகம்
எப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது.

இ - ள். நெஞ்சு புறம்பா துறந்தார் தவப்போர்வை - தம்முடையமனம் பற்று நீங்காது நேர்ந்தபடி சென்று துறவுக்குப் புறம்பாகச் சொற்செயல்களாலே துறந்தவராகக் காணப்படுபவருடைய தவவேடமாகிய போர்வை, கஞ்சுகம் அன்று பிறிது ஒன்றே - கஞ்சுகமென்பேமாயின், அதுவுமன்று; வேறொன்றேயாம், கஞ்சுகம் எப்புலமும் காவாமே மெய் புலம் காக்கும் - கஞ்சுகமானது எவ்விடத்தினையுங் காத்துக்கொள்ளாது தன்னுள்ளடங்கிய

சரீரமாகிய இடத்தினைமாத்திரங் காவல்செய்யும், இது இப்புலமும் காவாது - இவர் கொண்ட போர்வையோ இச்சரீரத்தைத்தானுங் காவல்செய்யமாட்டாது. எ - று.

மனத்திலே சிறிதும் பற்றுநீங்காதவர் பூண்டு நடிக்குந் தவவேடத்தால் யாதும் பயனில்லை என்பது கருத்து.

இவர் வேடம் இவர்க்கிவது நலமென்று கருதியிருந்தாரையும் காக்கமாட்டாதென்பது தோன்ற இப்புலமுமென்றார். "நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல்வஞ்சித்து வாழ்வாரின்வன்கணாரில்" என்பது வள்ளுவர். கஞ்சுகம் - சரீரத்திற்கு ஆயுதம் முதலியவைகளால் ஊறுவாராது காக்கும்படி போர்வீரரணியுஞ்சட்டை.

வஞ்சித்தொழுகுவோர்

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தே மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

இ - ள். வஞ்சித்து ஒழுகும் மதியிலிகாள் - மனக்கருத்தொன்றாக வேடம் வேறொன்றாக வஞ்சித்து நடக்கும் மதியிலிகளே! யாவரையும் வஞ்சித்தோம் என்று மகிழன்மின் - எல்லாரையும் வஞ்சித்துவிட்டோம் நங்குற்றத்தை யாவருமறியாரென்று மகிழ்ச்சி கொள்ளாதிருங்கள், (மகிழுதல் அறிஞர்செயலன்று.) ஒருவன் எங்கும் உளன் வஞ்சித்த காணும் என்று - ஒருவர் எவ்விடத்திலும் நிறைந்து நிற்கின்றார்; அவர் வஞ்சித்துச்செய்த செயல்களையெல்லாம் காண்பாரென்று, அஞ்சி அங்கம் குலைவது அறிவு - அவர் தண்டத்துக்குப் பயந்து சரீரம் பதறுதலே அறிஞர் செயலாகும். எ - று.

மறைவிற் செய்யப்பட்ட செயல்களையுங் கடவுளறிந்து தண்டிப்பாரென்பதையுணராது பிறரை வஞ்சித்தோமென்று மகிழ்வோர் மூடரென்பது கருத்து.

மதியாவது: நூலுணர்வுகொண்டு பொருளை நிச்சயிப்பது. கடவுள் ஒருவரிருக்கிறார்; அவர் எங்கும் நிறைந்தவர்; அவரில்லாத இடமில்லை; அவர் எல்லாம் அறிபவர்; அவராலறியப்படாததில்லை என்பது முதலாகச் சொல்லப்பட்டவைகளை யறியாமையின் மதியிலிகள் என்றார். (93)

பழிமொழிபரக்கை

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும்—கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினுஞ்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து.

இ - ள். மறைவழி பட்ட பழிமொழி - இரகசியத்திலே நடந்த காரியம்பற்றி எழுந்த பழிமொழி, தெய்வம் பறையறைந்தாங்கு ஒடி பரக்கும் - தெய்வம் பறையடித்துப் பரம்புதல்போல் எங்கும் விரைந்து சென்று பரம்பும், (அதற்குத் திருட்டாந்தம்) புன் புலால் கழி முடை நாற்றம் - இழிந்த புலாலினது மிக்க துர்க்கந்தமானது, பொதிந்து புறம் மூடினும் - அப்புலால் ஒன்றினுள்ளே அடக்கிப் புறத்திலே மூடப்படுமாயினும், சேயார் முகத்து சென்று உதைக்கும் - தூரத்திலுள்ளவருடைய முகத்திலும் போயடிக்கும். எ - று.

மறைந்துசெய்யப்படும் இழிந்தகாரியம் பலராலுமறிந்து பழிக்கப்படுமென்பது கருத்து.

மறைவழிப்பட்ட என்றது ஒழுக்கமுடையார்க்கேலாததாகிய மகளிர்புணர்ச்சியை. அதுவே விரைந்து சென்று பரக்கும். "தூர்த்த மங்கையர் சோர்வினிற் செய்பழி வார்த்தை யெங்கணும் வல்லையிற் செல்லல்போல்" என்பது **கந்தபுராணம்**. (94)

நிலைதவறுதல்

மெலியார் விழினு மொருவாற்றா னுய்ப
வலியார்மற் றொன்றானு முய்யார்—நிலைதப்பி
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமா லுய்யா பிற.

இ - ள். மெலியார் விழினும் ஒருவாற்றான் உய்ப - மெலியராயுள்ளவர்கள் தம் நிலையினின்று தவறுவார்களாயினும் ஒருவகையால் உய்திபெறுவார், வலியார் மற்று ஒன்றானும் உய்யார் - வலியவராயுள்ளவர்கள் தம் நிலையினின்று விழுவாராயின் யாதொருவகையானும் உய்ய மாட்டார், (அதற்குத் திருட்டாந்தம்) நிலை தப்பி நொய்ய சழக்கென வீழாவாம் - நிலைதவறிக் கனமில்லாத பொருள்கள் விரைவில் வீழமாட்டா, வீழினும் உய்யும் - ஒரோவழி வீழினும் பின்னர் உய்ந்துகொள்ளும், பிற உய்யா - கனமுள்ள பொருள்கள் விழுமாயின் ஒருவாற்றானும் உய்ய மாட்டா. எ - று.

உயர்வாகிய மேனிலையிலுள்ளவர்கள் அந்நிலையினின்று தவறுவார்களாயின் ஒருவழியானும் உய்ந்து மேலெழும்பமாட்டார்களென்பது கருத்து.

மெலியார் வலியாரெனப் பொதுப்படக் கூறினாரேனும் மெலியாரென்றது இல்லறத்தாரை எனவும், வலியாரென்றது தவநிலையினிற்பவரை எனவுங் கொள்க. செயல்களின் மென்மை வன்மை நோக்கி அங்ஙனங் கூறப்பட்டார்.

“இந்திரர்புகழுந்தொல்சீரில்லறம்புரிந்துளோர்க்குத்
தந்தமவொழுக்கந்தன்னிற்றருமுறைதவறிற்றேனும்
சிந்திடுந்தீர்வுமுண்டாற்செய்தவர்க்கணையசேரி
னுய்ந்திடலரிதால்வெற்பினுச்சியிற்றவறலொப்ப.”

—கந்தபுராணம்.

எனக் கூறுமாறுமறிக. (95)

மேலோர்செய்கை

இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லாற்—பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரை யொப்பவே
ஊனோம்பி யூன்றின் பலர்.

இ - ள். மேலையோர் செய்கை - ஒன்றனை ஆக்க வேண்டினாக்கவும், அழிக்கவேண்டி னழிக்கவும் வல்ல தவ வலியுடைய பெரியோர் செய்கைகள் சில, இசையாத போலினும் மற்றையோர்க்கு அல்லால் வசையாகா - சாத்திர விதிக்கு இசையாதனபோலக் காணப்படினும் அவரல்லராய சிறியோர்க்கல்லாமல் பெரியோர்க்கு வசையாகக் காணப் படமாட்டா, பசு வேட்டு தீ ஓம்பி வான் வழக்கம் காண்பாரை - பசுக்களை ஓமஞ்செய்து அக்கினிவளர்த்து மழை பெய்விக்க வல்ல பெரியோர்களை, ஊன் ஓம்பி ஊன் தின்பவர் ஒப்பவே - தமது உடம்பை வளர்த்தற்காகப் புலாலுண்ணும் அற்பர்கள் ஒப்பாவர்களா? எ - று.

பெரியோர் செயல்களுள்ளே சில பொருந்தாதனவாகக் காணப்படினும் பிறர்க்குப் பெரும்பயன் கொடுத்தலால் அவற்றைப் பெரியோரிகழமாட்டாரென்பது கருத்து.

பசு - யாகத்துக்குரிய மிருகங்கள். வான்வழக்கம் - மழை பெய்தல். காண்பார் - செய்பவர். மேலையோரென்றது முனிவரை. ஓம்பி - வினையெச்சத்திரிபு. (96)

பற்றியும்பற்றுதுநிற்றல்

எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி—எவரெவர்க்கும்
உப்பாலாய நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென.

இ - ள். எவர் எவர் எ திறத்தர் - யார் யார் எவ்வெவ்வகையினராய் நிற்கின்றாரோ, அவர் அவர்க்கு அத்திறத்தராய் நின்று ஆவன கூறி - அவரவருக்கு அவ்வவ்வகையினராய் நின்று செயற்பாலனவற்றை அறியுமாறு சொல்லி, எவர் எவர்க்கும் உப்பாலாய் எம்முடையார் - யாவருக்கும் புறத்தராய் எம்மையாளுந் தன்மையுடையராகிய ஞானிகள், தம்முடையான் எப்பாலும் நிற்பது என நிற்ப - தன்மையுடைய கடவுள் சேர்ந்துஞ் சேராமல் எவ்விடத்தும் நிற்பதுபோலத் தாமும் பற்றின்றி நிற்பர். எ-று.

ஞானிகளாகிய பெரியோர் உலகத்தாரோடு சேர்ந்து நின்றாரேனும் பற்றில்லாதவராய் நிற்பரென்பது கருத்து. (97)

மெய்யுணர்ந்தார்

மெய்யுணர்ந்தார்பொய்ம்மேற்புலம்போக்கார்மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுகப் புலங்காப்பார்—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண னீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து.

இ - ள். மெய்யுணர்ந்தார் பொய்மேல் புலம்போக்கார் - உண்மைப்பொருளை யுணர்ந்தவர்கள் பொய்ப்பொருள் கண்மேலே தம்முடைய பொறிகளைச் செல்லவிடமாட்டாராயினும், மெய்யுணர்ச்சி கைவருதல் கண்ணு - மெய்யுணர்வு நீங்காது வசப்பட்டிருத்தலைக் கருதி, மெய்யுணர்ந்தார் காப்பே நிலையா - மெய்ஞ்ஞானிகளுடைய காவலே நிலையாகவும், பழி நாணல் நீள் கதவா - பழிக்கு நாணுதலே நீண்ட கதவாகவுங்கொண்டு, புலம் சேர்ப்பார் - பொறிகளைச் சேர்ப்பாராய், நிறை தாழ் செறித்து - நிறையென்னுந் தாழ்க்கோலை இறுக்கி, காப்பார் - காத்துக்கொள்ளுவார். எ - று.

மெய்ப்பொருளை யுணர்ந்தவர் அதனையே இடைவிடாது பாவனை செய்வாரென்பது கருத்து.

மெய்யுணர்ந்தார் காவலாவது மெய்ஞ்ஞானர் தலைப்படினும் ஒரோவழிப் பிராரத்த வாசனையால் வரும் மறவியை நீக்கி ஞானத்தைப் பிரகாசிப்பித்தல். இதுபற்றியே சிவஞானபோதத்தும "அன்பரொடுமரீஇ" என்றார். நிறை - மனத்தை வேறொன்றில் விடாது நிறுத்துதல். (98)

பேரின்பம்

க்ற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினுள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்.

இ-ள். கற்று துறைபோய காதலற்கு - கற்றற்பாலன வாகிய நூல்களையெல்லாம் கற்றுணர்ந்து அதற்குத்தகநின்ற நாயகனுக்கு, கற்பினள் பெற்று கொடுத்த தலைமகன்போல்-கற்பினையுடைய மனைவி பெற்றுக் கொடுத்த சிரேட்ட குமாரனைப்போல, முற்ற துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்றுவதே இன்பம் - இருவகைப்பற்றினையும் முற்ற விட்டவர்க்கு மெய்யுணர்வின்கண்ணே தோன்றுகின்ற ஆனந்தமே இன்பமாகும், இறந்த எலாம் துன்பம் அலாது இல் - இஃதொழிந்த உணர்வின்கண்ணே தோன்றுவன எல்லாம் துன்பமன்றி வேறில்லை. எ - று.

உலகப்பற்றினை முற்றவிட்டவர்க்கு மெய்யுணர்ச்சிக்கண்ணே தோன்றுவதே இன்பம் என்பது கருத்து.

துறைபோதல் - அதற்குத்தகநிற்றல். இதனைச் சிலப்பதிகாரத்திலே "வான்பொருட்கேள்வித்துறைபோயவர்முடித்த" என்பதனுரையானு முணர்க. இதற்குச் செயற்பாலனவாகிய அறங்களைச் செய்துமுடித்த எனக் கூறுதலும் பொருந்தும். இருவகைப்பற்றாவன: அகப்பற்று, புறப்பற்று என்பன. அகப்பற்று-யாக்கையின்கண்ணுள்ள விருப்பு. புறப்பற்று - செல்வத்தின்கணுள்ள விருப்பு. (99)

முத்திபெற்றோர்

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச் சென்றார்.

இ-ள். கற்றுங்கு அறிந்து - ஞானநூல்களைக் கற்றவாறே அவற்றாற்பெறப்படும் மெய்ப்பொருளை உணர்ந்து, அடங்கி தீது ஒரீஇ - செருக்கின்றி அமைந்து காமம் கோபம் முதலிய தீங்குகளை விட்டு, நன்று ஆற்றி - கொல்லாமை வாய்மை முதலிய நற்செயல்களைச் செய்து, பெற்றதுகொண்டு மனம் திருத்தி - பெற்ற ஞானத்தினாலே

இருவகைப்பற்றும் நீங்க மனத்தை ஒருவழிப்படுத்தி, பற்றுவதே பற்றுவதே பற்றி - பற்றப்படுவதாகிய வீட்டு நெறியைப் பற்றிநிற்பதாகிய தியானசமாதிகளை மனத்துட் கொண்டு, பணி அற நின்று - தன்செயலறநின்று, ஒன்று உணர்ந்து நிற்பாரே நீள் நெறி சென்றார் - ஏகவஸ்துவாகிய பிரமத்தினையுணர்ந்து அதன் செயலாய் நிற்பவரே முத்தி நெறியிற் சென்றவராவர். எ - று.

ஞானநூல்களைக் கற்று இயமம் முதலியவைகளைச் செய்து பிரமப்பொருளையுணர்ந்து நிற்பவரே முத்திக்குரியராவரென்பது கருத்து.

இயமம் முதலியனவாவன: இயமம், நியமம், இருப்பு, பிராணாயாமம், மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி என்னும் யோகவுறுப்புக்கள். இயமமாவது: கொல்லாமை, வாய்மை முதலியன. நியமமாவது: பெற்றதற்குவத்தல், கற்பனைகற்றல் முதலியன. இருப்பு - ஆசனம். பிராணாயாமம் - பிராணவாயுவைத் தடுத்தல். மனவொருக்கம் - மனத்தினைப் பொறிவழிச் செல்ல விடாது ஒருவழிப்படுத்து நிறுத்தல். தாரணையும் இதனுள் அடங்கும். தியானமாவது: நிறுத்திய அம்மனத்தினை நிலைகுலையாது முதற்பொருளோடிணைத்தல். சமாதியாவது: அம்முதற் பொருளோடு தான் அதுவென வேறாகாது நிற்றல். (100)

முடிந்தபொருள்

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

இ - ள். ஐயம் திரிபு இன்று - சந்தேகமும் விபரீதமுமின்றி, அளந்து உத்தியில் தெளிந்து - காட்சி முதலிய அளவைகளால் அளந்து பொருந்துமாற்றான் நிச்சயித்து, மெய்யுணர்ச்சி கண் விழிப்பதூங்குவார் - மெய்யுணர்வைக் கண்விழித்திருக்கத் தியானநித்திரைசெய்பவர், தம்முள்ளே காண்பதே காட்சி - தம்முடைய உள்ளத்தே காணுவதே

காட்சியாகும், கனவு நனவாக பூண்பதே தீர்ந்த பொருள் - அந்தத் தியானநித்திரையிற் காணும் கனவை நனவாகப் பூணுவதே முடிந்த பொருளாகும். எ - று.

மெய்யுணர்வு பெற்று முதற்பொருளாகிய பிரமத்தோ டொற்றுமையுற இடைவிடாது பாவனை செய்வோர் அதுவாக எல்லாவற்றையுங் காண்பதே முடிந்தபயன் என்பது கருத்து.

ஐயமாவது பலதலையாயவுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் உளவோ இலவோவென ஒன்றித் துணிவுபிறவாது நிற்றல். விபரீதமாவது மயக்கவுணர்வு. அது இருவினைப்பயனுங், கடவுளுமில்லை எனவும், மற்றுமித்தன்மைய வுஞ் சொல்லும் மயக்கநூல் வழக்குகளை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல். அளவையாவன பொறிகளாற் காணுங் காட்சியும், குறிகளானுய்த்துணரும் அநுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமுமென மூன்றுமாம். பிற இவற்றுளடங்கும். பொருந்து மாறுவது இது கூடும் இது கூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது. கனவு நனவாகப் பூண்டலாவது தியான நித்திரையிற்காணப்பட்ட முதற்பொருள் ஒன்றுமேயன்றி மெய்ப்பொருளாக வேறொன்றுங் காணப்பெறுமை.

மெய்யுணர்ச்சி என்பதற்குப் பதிமுதலிய பொருள்களை உள்ளவாறுணர்ந்த அறிவு எனவும், கண்விழிப்ப என்பதற்கு எதிர்முகமாக நோக்காது தாமதுவாகப்பார்க்க எனவும், துங்குவார் என்பதற்கு முதற்பொருளின்கண்ணே மனத்தை ஒடுக்கிக் கிடப்பவர் எனவும், தம்முள்ளே காண்பது என்பதற்கு அம்முதற்பொருளோ டொற்றுமையுற இடைவிடாது பாவித்தல் எனவும் கூறுவாரும் கண்விழிப்பத்துங்குவார் என்பற்கு பரமான்ம விஷயத்திலே விழிப்பும், இவ்வுலகவிடயத்திலே நித்திரையுமுடையவர் எனக் கூறுவாருமுளர். (101)

நீதிநெறிவிளக்கம் மூலமும் உரையும்

முற்றிற்று.

அருஞ்சொற்பொருள்கோள்

அகப்பகை—உட்பகை.

அகற்றுதல்—பெருகச்செய்தல். [புரம் - வீடு.

அந்தப்புரம்—அரசன் மனைவியிருக்கும் வீடு. அந்தர் - உள்.

அரிப்பு—தட்டார்சாலையிற் சிதறுண்ட பொற் பொடி. அரித்தெடுக்கப்படுதலின் அரிப்பெனப்பட்டது.

அறங்கடை—பாவம். அறத்தினின்று நீக்கப்பட்டமையின் அறங்கடையெனப்பட்டது, அறம் - தருமம். கடை - கடியப்பட்டது. இது கடியென்பதினின்று பிறந்தது. கடி - களைதல்.

அறிமடம்—அறிந்துமறியார்போன்றிருத்தல். அறி - அறிதல். மடம் - அறியாமை, [தொழில்.

ஆள்வினை—முயற்சி. ஆளப்படும் வினையென்றவாறு. வினை -

இலம்பாட்டார்—வறியவர். இலம்பாடு - வறுமை.

உத்தி—பொருந்துமாறு.

உய்த்துணர்வு—சொற்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தறிதல், புத்தியை நூல்களிலே செலுத்தி ஆராய்ந்து பொருந்துமாறறிதல்.

ஏக்கழுத்தம்—இறுமாப்பு, தலையெடுப்பு. ஏ - உயர்ச்சி. கழுத்து - தலை. அம் - ஒரு வினைமுதற்பொருள் விகுதி. "எள்ளினர்கட்கேக்கழுத்தம்" என்னுஞ் சிந்தாமணியுரையாலும் இப்பொருள் துணியப்படும்.

ஐயம்—பலதலையாயவுணர்வு.

ஒண்மை—நன்மை.

கட்டுரை—உறுதிவார்த்தை. கடியென்னும் உரிச்சொல் உரை என்பதனோடு புணரும்போது விகாரமாயிற்று. கடி - மிகுதி.

கடப்பாடு—தவிராது செய்தற்பாலது, முறைமை

கடு—கடுஞ்சொல்லு. உறைப்புள்ள பதார்த்தம். இது கடியென்னும் உரிச்சொல்லினின்று பிறந்தது.

கண்கூடு—பிரத்தியக்ஷம். கூடு - கூடுதல்.

கல்வி—கற்கப்படுவது.

கற்பு—கல்வியறிவு.
களைகண்—இடர்களைதலுடையது.
குப்பி—சேறு. [வடமொழித்திரிபு.
குய்யம்—இரகசியம், வஞ்சகம். இது குஹ்யம் என்னும்
கைத்து—பொருள், கையிற்பொருந்துவது.
கைவருதல்—கையில்வருதல், வசமாதல்.
சீர்ப்பாடு—சிறப்பாதல்.
சுட்டு—நன்குமதிப்பு.
செங்கோன்மை—நீதி.
செலவு—வழி.
தாக்கணங்கு—இலக்குமி, தகுதியுடைய பெண்.
நட்பு—நண்பன்.
நகையினர்—ஒளியுடையவர், கீர்த்தியுடையவர்.
நாண்—தகாதகாரியத்திலே மனம் ஒடுங்குதல்.
பக்கத்தார்—அமாத்தியர்.
பகை—விரோதி, விரோதம்.
பார்வை—கண்ணோட்டம்.
பிழைப்பாடு—பிழைபடுதல்.
பீழை—துன்பம். இது பீடை என்னுஞ்சொல்லின் விகாரம்.
புக்கில்—வீடு. புகு - பகுதி. இல் - ஒருவிகுதி.
பூத்தல்—உண்டாதல்.
போக்கு—குற்றம்.
மடுத்தல்—இடைப்படுத்தல்.
மறை—இரகசியம்.
முழுமணி—மாணிக்கம்.
யாத்தல்—பிணித்தல்.
வாய்தல்—நேர்படல். [தென்பது பொருள்.
வீடு—முத்தி. இருவகைப்பற்றினையு முற்றவிடுதலுடைய
வெங்காரம்—ஒரு மருந்துச்சரக்கு; அது, வெம்மையுடைய
ஒருவகையுப்பு. காரம் - உப்பு,
வெள்ளம்—ஒருதொகையெண்.
வேர்ப்பு—கோபம்.

செய்யுள் முதற்குறிப்பகராதி

பிரகடன பத்திரம்.

		ரூ.	ந.ப.
கந்தபுராணம் 2 பாகம்	....	8	00
ஷை கலிகோ பவுண்டு	....	9	00
கந்தபுராண வசனம்	....	5	00
ஷை கலிகோ பவுண்டு	....	5	50
பெரியபுராணம் சூசனத்தோடு	....	5	00
ஷை கலிகோ பவுண்டு	....	5	50
பெரியபுராண வசனம்	....	2	75
திருவாதவூரடிகள் புராணம் உரையுடன்	....	4	00
தெய்வயானையம்மை திருமணப்படலம் உரை	....	1	50
வள்ளியம்மை திருமணப்படலம் உரை	....	1	25
நன்னூற்காண்டிகையுரை கலிகோ பவுண்டு	....	4	00
நன்னூல் விருத்தியுரை கலிகோ பவுண்டு	....	4	00
* திருவிளையாடற்புராணம்	....	2	50
திருக்கோவையாருரை கலிகோ பவுண்டு	....	4	00
* சேதுபுராணம்	....	2	00
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு உரையுடன் கலிகோ பவுண்டு	....	2	25
கோயிற்புராணவுரை	....	1	25
கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார்	....	1	50
தாயுமானசுவாமிபாடல்	....		
சூடாமணி நிகண்டு 12 தொகுதியும் உரையுடன் முதலிரண்டு தொகுதிகள் சொற்பொருளுடன்	...		
ஷை 11, 12 தொகுதியுரை	...		

* கமிஷன் கிடையாது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்க

வித்தியாநுபாலன அச்ச

300, தங்கசாலைவீதி, செ